தமிழ்ப் பொழில்

தஞ்சைக் கரந்தைத் தமிழ்ச்சங்கத் திங்கள் வெளியீடு.

துணர் ௨௧ } பார்த்திப—புரட்டாசி 1945—செப்டம்பர் { மலர் ௩

உலகப்பெரும்போர் ஒழிந்தது மகிழ்வே.

இரண்டாம் உலகப் பெரும்போர் ஒழிந்தமை கேட்டு மிக்க மகிழ்ச்சி யடைகின்றோம். ஐரோப்பிய நாடுகளை யெல்லாம் வென்று அந்நாட்டு மக்களின் உரிமையை (சுதந்திரத்தை)ப் பறித்து அவர்களை அடக்கி அடிமை கொண்டு ஆட்சி புரிய எண்ணிச் செருமானிய நாட்டிற் றோன்றிய நாசி இயக்கத்திற்குத் தலைமை தாங்கியிருந்த கிட்லர், இரண்டாம் உலகப் பெரும்போரைத் தொடங்கிக் கொடுஞ் செயலாற்றினார். இப்போரில் வெற்றி கண்டால் ஐரோப்பா கண்டம் முழுமையும் உள்ள மக்கள் தம் ஆணைவழி ஒழுகுவார்களெனவும் மனப்பால் குடித்தார். இத்தாலியிலும், அதைச் சூழ்ந்துள்ள நாடு களிலுமுள்ள மக்களின் உரிமைகளைப் பறித்து, அம்மக்களை அடிமை யாக்கி அவர்களை அடக்கியாள இத்தாலியிலிருந்த பாசிச இயக்கத் தலைவராகிய 'முசோலினி' முனைந்து செயலாற்றினார். ஆசியா கண்டம் முழுமையும் அடிப்படுத்தியாள எண்ணி 'யப்பானியர்' போர் புரிந் தனர். இவர்களால் உலகமக்கள் அடைந்த இன்னல்களையும், இழந்த உடைமைகளையும், மடிந்த உயிர்களையும் எங்ஙனம் ஆய்ந்து தொகுத்து எழுதிக்காட்ட வல்லேம்! இவர்களின் வரலாறும், இவர்கள் உயர் பதவி பெற்றமையும், பதவி பெற்றபின் படைத்துக்கொண்ட நிலைமை களையும் கிழமைத்தாள், நாட்டாள்களின் குறிப்புக்களைத் துணை யாகக்கொண்டு, பொழிலன்பர்கள் அறிவான் வேண்டிச் சிலவற்றைக் குறித்துணர்த்து கின்றேம்.

செருமானியர் உயர்ந்த ஆரிய இனத்தைச் சேர்ந்தவரென்றும், உலகையாளப் பிறந்தவரென்றும், ஏனைய நாட்டினர் செருமானிய ரினின்றும் தாழ்ந்தவரென்றும், செருமானிய உயர்ந்த ஆரிய இனத் தவர்க்கு அடிமை செய்யவே ஆண்டவனால் பிறநாட்டினர் படைக்கப் பட்டனரென்றும் துணிந்து கூறிச்செயலாற்றிய "கிட்லரின்" பேதை மையை என்னென்பேம்! என்னென்பேம்!! செருமானிய நாட்டிற் றங்கி, பொருளாதாரம், கல்வி முதலிய துறைகளில் முற்போக் கடைந் திருந்த "யூதர்கள்" கிட்லரால் ஒரு சிறிதும் இரக்கமின்றிச் சுட்டு வீழ்த்தப்பட்டனர். ஆரியர் உயர்ந்தவரென்னும் அகந்தை தலைக்

கேறினமையால் இந்நாட்டிலுள்ள பழங்குடி மக்களைத் தீண்டத்தகா தாரெனச் சமுதாயத் துறையில் ஒதுக்கிவைத்து இந்நாட்டிலுள்ள ஆரியர் கொடுமை செய்கின்றனர் என்பதனை யறிந்து இதுபோது அதனையொழிக்கக் கிளர்ச்சி புரிகின்றனர். செருமானிய நாட்டினின் றும் இந்நாட்டிற்கு வந்து, ஆரியர்களால் எழுதி வைக்கப்பெற்றிருந்த, "**ஆரியர் உயர்ந்தவர்; அல்லாதார் தாழ்ந்தவர்**" என்னுங் கொள்கையைக் கொண்ட வேதங்களைப் படித்துணர்ந்து, செருமானிய மொழியில் இவ் வேதங்களை மொழிபெயர்த்துத் தந்து, அந்நாட்டு மக்கட்கும், ஆரியப் பித்து தலைக்கேறச் செயலாற்றிய '**மாக்ஸ் முல்லர்**' போன்றாரின் செயல் மேனாட்டிலுள்ள செருமானியரிடை எத்தகைய எண்ணங்களை விதைத்துளவென்பது இதனால் நன்கு விளங்குகின்றதன்றோ? மேனாட் டில் ஆரியம் கிட்லரைத் தலைவராகக் கொண்டு உலக முழுமையும் அடிமைப்படுத்த எண்ணித் தலைதூக்கி எழுந்து செயலாற்றித் தோல்வியுற்று, அடிப்பட்டுவீழ்ந்து மண்ணைக் கௌவியது. கிட்லரின் வீழ்ச்சி ஆரியத்தின் வீழ்ச்சியன்றோ? கிட்லர் 1889-ஆம் யாண்டு, ஏப்பிரல் 20-ஆம் நாள் ஆஸ்திரியாவில் பிறந்தார். இவர் தந்தையார் இவரை மிக வருத்திப் படிப்பித்தும் இவருக்குக் கல்வியில் அறிவு செல்லவில்லையாதலின் கல்வி காரணமாகத் தந்தையாரால் மேலும் மேலும் வருத்தப்பெற்றார். இங்ஙனம் இளமையில் வருத்தப்பெற்ற அவ்வருத்தத்தின் காரணமாகக் கிட்லர் ஆஸ்திரிய நாட்டிற்கோ அந் நாட்டு அரசாங்கத்திற்கோ எக்காரணங் கொண்டும் பணியாற்றக் கூடாதென்னும் உறுதிப்பாட்டினை உளத்துட்கொண்டார். அங்ஙனம் உறுதிகொண்ட கிட்லர் 1911-ல் செருமானியநாட்டிலுள்ள '**மியூனிச்**' சிற்குச் சென்று ஆங்குக் கட்டிடம் கட்டுவோருக்குச் செங்கல் தூக் கித்தரும் சிற்றாளாக அமர்ந்து குற்றேவல் புரிந்தார். இதற்கிடையே தன்னை ஒரு ஓவியம் வல்லோனாக மதித்து, பல அழகற்ற ஓவியங்களை வரைந்து விற்க முயன்றார். இவர் ஓவியங்களைப் பொருள்கொடுத்து வாங்குவார் ஒருவரும் இலராதலின் அத்துறையில் தமக்கேற்பட்ட தோல்வி குறித்து வருந்தினார். 1914-ல் நிகழ்ந்த உலகப் பெரும் போரில் செருமானியரின் போர்ப்படை வரிசையில் ஆஸ்திரியராகிய இவர் சேர்ந்து பணியாற்றுதற்கு உரிமையற்றவராய் இருந்தும், கள்ள மாகத் தன்னை மறைத்துக்கொண்டு தாமும் செருமானியரேயெனப் போர்ப் படைத் தலைவரிடங் கூறிக் குற்றேவல் புரியும் தொண்டர் படையில் ஒரு தொண்டராகச் சேர்ந்தார். தொண்டர் படையில் பணியாற்றிய காலத்தில் போர்ப் புண்கள் ஒன்றும் இவருக்கு ஏற்பட வில்லையாயினும், துடுமெனப் பகைவரால் விளைவிக்கப்பெற்ற நச்சுப் புகையிலகப்பட்டு இவர் மயக்கமுற்றாராதலின் இவர்க்குற்ற மயக்கத் தைப் போக்குவான்வேண்டி அந்நாட்டிலுள்ள மருத்துவக் கோட்டத் திற் றொண்டர் படையினரால் சேர்க்கப் பெற்றார். அம்மருத்துவக் கோட்டத்தில் இவர்க்குற்ற நச்சுப் புகையின் விளைவை நீக்குதற்காகச் சேர்க்கப்பட்டபோது ஆண்டுத் தங்கி இருந்த காலத்தில் "**செருமானி யைப் புரக்கத் தாம் தோன்றி யுள்ளே**"மென்னு மெண்ணம் இவர்க்கு உண்டாயிற்றும். செருமானிய நாட்டைக் காப்பாற்றத் தாம்

தோன்றியவர் என்னும் எண்ணம் இவருக்கு அழுத்தமாக எழவே அவ்வரசாங்கத்தின் தலைமைப் பதவியைக் கைப்பற்றவெண்ணிச் செருமானிய அரசாங்கத்தை யெதிர்த்து அவ்வரசாங்கத்திற்கு எதிராகப் புரட்சி செய்தார். அப்புரட்சிக் குறி தவறியதால் அவ்வரசாங்கத்தாரால் பிடிக்கப்பெற்று ஐந்தாண்டுகள் சிறைத்தண்டம் விதிக்கப் பெற்றார். கிட்லர் சிறைக்கோட்டம் நண்ணியதும் அச்சிறைக் கோட்டத்திற் றங்கி 'எனது போராட்டம்' என்ற நூலை எழுதி முடித்தார். 1930-ல் செருமானியில் பஞ்சம் விளைந்தது. இப் பஞ்ச காலத்தில் செருமானிய நாட்டின் முதலாளிகள் தொழிலாளர்களை இரக்கமின்றி நசுக்கிப் பிழிந்து தாங்கள் கொள்ளைமுத லீட்டலுக்குக் கருவியாய் இருப்பவர்களை ஆட்சியி லமர்த்த விரும்பினர். இவ்வமையத்தில் இரக்கமின்றிக் கொடுமை செய்யும் கிட்லரை முதலாளிகள் தங்கட்குத் துணைபுரிய வேண்டி நின்றனர். கிட்லரும் தமக்குக் கிடைத்த ஒரு வாய்ப்பினை நன்கு பயன் படுத்திக் கொண்டார். செருமானிய நாட்டு முதலாளிகளையும், தொழிலாளிகளையும் அச்சுறுத்தி இரு பிரிவினரும் தன்னை ஆதரிக்கச் செயலாற்றித் தமது நாசிக் கட்சி உறுப்பினர் 106 பேர்களைத் தேர்ந்தெடுக்கச் செய்து, செருமானிய நாட்டுச் சட்டசபையில் முழுவலியுடன் அமர்ந்தார். 1932-ல் கின்டென்பர்க்குக்கு எதிராகத் தலைவர் பதவிக்குப் போட்டியிட்டார். 1933-ல் அரசாங்க சபைக்குத் தலைவரானார். தமது கட்சி யாட்களைக் கொண்டு அரசாங்க மண்டபத்தை நெருப்பிற் கிரையாக்கி விட்டு, அச்செயல் பொது உடைமைக் காரரால் நிகழ்ந்ததெனக் கூறி அச்சுறுத்தி நாட்டின் அமைதியை நிலை நாட்டுதற்குத் தன்னாலேயே முடியுமெனப் பறைசாற்றிப் பிறரையும் நம்பும் வண்ணம் செய்து செருமானிய நாட்டின் எல்லா ஆட்சித் தலைவர் (சர்வாதிகாரி) ஆனார். 1934-ஆம் யாண்டில் பொது உடைமையைக் குறித்துப் பேசியவர்களை இரக்கமின்றி அழித்தொழித்தார். 1935-ல் யூதர்களுக்குப் பகையான சட்டங்களைப் பிறப்பித்தார். 1936-ல் "லோகர்னே" ஒப்பந்தத்தைக் கிழித்தெறிந்து விட்டு 'ரைன்லாந்தில்' தமது படைகளைச் செலுத்தினார். 1938-ல் 'ஆஸ்திரியா' இவரால் கைப்பற்றப்பட்டது. இவ்வாண்டிறுதியில் 'சூடெட்டன்' நிலப்பகுதி வேண்டுமென்று கேட்டார். 'மியூனிச்சு' ஒப்பந்தம் ஏற்பட்டது. 1939-ல் 'செக்கோஸ்லோவேகியா' கிட்லரால் கைப்பற்றப்பட்டது. இவ்வாண்டு ஆகஸ்டில் உருசியா (ரஷ்யா)வோடு ஒப்பந்தம் செய்து கொண்டார். போலந்தைத் தாக்கினார். பிரித்தனோடு போர் தொடங்கியதாக அறிக்கை வெளியிட்டார். 1941-ல் உருசியாவையுந் தாக்கினார். எல்லாப்படைகட்குந் தாமே தலைமை தாங்கினார். இவரின் சர்வாதிகாரத்தைப் பொறுக்காது போர்ப் படைவீரர்கள் இவரைக் கொலைசெய்ய 1944-ல் முயற்சித்தனர். அம்முயற்சி வெற்றிபெறவில்லை. இங்ஙனம் ஒவ்வொரு செயலிலும் வென்றிகண்ட கிட்லர் போலந்து நாட்டை மூன்று திங்களிற்றாக்கி அடிப்படுத்தினார். பிரெஞ்சு நாட்டினை இருபத்தொன்பது நாட்களில் பணியச்செய்து அடிமைப் படுத்திச் செருமானிய ராணுவத்துக்குப் பிரெஞ்சு நாட்டினர்

பணிந்தொழுக வேண்டுமெனப் பணித்தார். பெல்ஜியத்தின் உரிமையை (சுதந்திரத்தை)ப் பத்தொன்பது நாட்களில் பறித்துக் கொண்டார். 'டென்மார்க்'கின் உரிமை பன்னிரண்டுமணி நேரத்தில் கிட்லரால் சிதைவுற்றது. இங்ஙனம் மின்னல் விரைவில் வென்றி கொண்டு வாகைசூடி விளங்கிய வீர கிட்லர் உருசிய நாட்டினர் முன்னின்று போருடற்றும் ஆற்றலில்லாராய்ப் பின்னடைய வேண்டியவரானார். கிட்லரின் முன்னேற்றத்தைப் பின்னேற்றமாகச் செய்த பெருமை உருசிய நாட்டினர்க்கே உரித்தானதாகும். இங்ஙனம் வீர உருசியர் வீறுடன் போருடற்றலை மதியாது கிட்லர் இகழ்ந்துரைத்தார். இறுதி வெற்றி எமக்கே என முழங்கினார். இலந்தன் மாநகரிலும், உருசியத் தலைநகராய மாஸ்கோவிலும் செருமானியரின் நாசிக் கொடியாகிய '**சுவத்திகா**'க் கொடி பறக்குமென்றார். இங்ஙனம் இவர் வெருட்டலுரைகளை வீசிக்கொண்டிருக்கு மமையத்தில் செருமானியத் தலைநகராய பெர்லினின்மேல் நேசதேய விமானங்கள் குண்டுகளைப் பொழிந்து இவரை அச்சுறுத்தின. அவ்வச்சுறுத்து தலையும் பொருட்படுத்தாது மேலும் மேலும் போராட்டத்திலேயே இவர் அறிவைச் செலுத்தினார். இவ்வாறு கிட்லர் செயலாற்றுதற்குக் காரணராயிருந்தவர்கள் வல்லரசாளர்ளே என்பதை யாரும் மறுப்பதற்கில்லை. மேற்கு ஐரோப்பாவில் பிடிக்க வேண்டிய இன்றியமையாத நாடுகளை யெல்லாம் கிட்லர் பிடித்துக்கொண்ட பின் பிரெஞ்சுக் கரைத் துறைமுகங்களிலிருந்துகொண்டு விமானங்களை ஏவிவிட்டுத் தாக்கினால் இங்கிலாந்தை அடிபணியச் செய்து விடலாமென எண்ணி அப்பணியினை மேற்கொண்டு, செயலாற்றினார். பிரித்தானியர் சீனாவில் ஷாங்காயிலிருந்து வெளியேற வேண்டிய நிலைமை யப்பானியர் தாக்குதலால் ஏற்பட்டது. இத்தாலியர் ஆப்பிரிக்காவில் பிரித்தானிய சோமாலிலாந்தைத் தாக்கினர், அங்கும் பிரித்தானியர் பின் வாங்க நேரிட்டது. பிரித்தானியப் படைவீரர்கள் '**நார்வே**'யில் இறங்கினர். அங்கு இறங்கிய பிரித்தானியப் போர் வீரர்கள் செருமானியப் போர் வீரர்களால் தாக்கப்பெற்றுத் தோல்வி யுற்றனர். பிரெஞ்சுப் போர்ப்படை (ராணுவ) வீழ்ச்சியின் பின் '**டன்கர்க்**'கிலிருந்து பிரித்தானியர் துடுமெனத் தமக்குக் கிடைத்த அமையத்தைப் பயன்படுத்திக் கொண்டு தப்பியோடினர். இந்நெருக்கடியான அமையம்பார்த்து யப்பானியர், பிரித்தானியர் காழகத்தின் (பர்மாவின்) பெருவழியை (ரஸ்தாவை) மூடவேண்டு மென்றனர். பிரித்தானியர் இணங்கினர். இங்ஙனம பிரித்தானியர் தோல்வியுற்ற நிலைமையில் செருமானியர் இங்கிலாந்தின்மீது விமானங்களை ஏவித் தாக்கினர். பிரித்தனின் விடா முயற்சியினாலும் காலஞ் சென்ற அமெரிக்கத் தலைவர் '**ரூஸ்வெல்ட்**' அவர்கள் முயற்சித்து அமெரிக்க நடுநிலைமைச் சட்டத்தை யொழித்துப் பிரித்தன், உருசியா முதலிய நாட்டினர்க்கு "**இரவல் குத்தகை**"மூலமும், மாற்றுப்பொருள்பெற்றும், போர்க்கருவிகளையும் ஏனைய பொருள்களையுங் கொடுத்து உதவியமையாலுமே இப்போரில் நேசநாட்டினர் கிட்லரையும், முசோலினியையும் ஒழித்து வென்றி கொண்டார்கள் என்னலாம். '**கிரீயர்**' என்னும் பெயரு

டைய அமெரிக்கக் கப்பல் செருமானிய நீர் மூழ்கிக் கப்பல்களால் தாக்கப்பட்டதே அமெரிக்கர் போரில் இறங்குதற்குக் காரணம் என்னலாம்.

போலந்து நாட்டைச் செருமானியர் ஒருபுறமும் உருசியா நாட்டினர் ஒருபுறமுந் தாக்கி இருவரும் பங்கு போட்டுக் கொண்டனர். தற்காப்பிற்காகப் பின்லாந்துமீது உருசியர் 1940-ஆம் ஆண்டு ஜனவரித் திங்கள் 25-ம்நாள் போர் தொடுத்தனர். இப்போரில் உயிர்கள் வீணே மடிந்தொழிவதைக் கண்டு இரங்கிய பின்லாந்தினரும் உருசிய நாட்டினரும் சண்டையை நிறுத்தி உடன்பாட்டு ஒப்பந்தம் செய்து கொண்டனர். 1940-ஆம் யாண்டு ஜுன் திங்கள் 28-ம் நாள் உருசிய நாட்டினர் ருமேனியாவின் ஒரு பகுதி தங்கள் தற்காப்பிற்கு வேண்டுமெனக் கேட்டனர். உருசியரின் வேண்டுகோள் மறுக்கப்பட்டவுடன் தங்கள் படைகளை ஏவி விட்டனர். உடனே உருசியத் தலைவர் ஸ்டாலின் எல்லாப் படைகட்கும் உரிய தலைமைப் பதவியைத் தாமே ஏற்றுக் கொண்டார். இச்சமயத்தில் உருசிய நாட்டிற்குச் சென்றிருந்த யப்பானிய அயல்நாட்டமைச்சர் ஸ்டாலினேடு உடன்பாட்டு ஒப்பந்தமொன்றைச் செய்து கொண்டார். இவ்வமையத்தில் பிரித்தானியரின் சார்பில் உருசியாவோடு ஒப்பந்தம் செய்துகொள்ள 'கிரிப்ஸ்' துரை உருசிய நாட்டிற்கு அனுப்பப் பெற்ருர். இவை யாவற்றையும் கூர்ந்து நோக்கிய கிட்லர் உருசியா தனது கிழக்கு எல்லைப் புறத்தைச் செவ்வனே பலப்படுத்தி வருதலையுங் கண்டார். உருசியர்கள் மிகுந்த வலியைத் திரட்டிக் கொள்ளுதற்கு முன்னரேயே அவர்களைத் தாக்கி ஒடுக்கிவிடவேண்டுமெனக் கிட்லர் எண்ணினர். பொதுவுடைமைமீது கிட்லருக்குள்ள வெறுப்பின் காரணமாக அவர் உருசியாவைத் தாக்கவில்லை. உருசியாவைத் தாக்கித் தன்னடிப் படுத்த வேண்டியே தாக்கினர். நிலைமைகளை நன்கு ஆய்ந்து ஒருமுடிபிற்கு வந்த பின்னரே அவர் உருசியாவைத் தாக்கினர்.

உருசியா (ரஷ்யா)வின் சிறப்பு.

போர் மிகமிகக் கடுமையாக நிகழ்ந்த காலத்திலும் உருசியத் தலைவர் ஸ்டாலின் மிகமிக அறிவாற்றலோடும் அரசியற் றந்திரத்தோடும் நடந்துகொண்டார். போர் முடிந்த பின்னரும் அரசியல் தந்திரத்தோடும், அறிவாற்றலோடும் நடந்து வருகின்ருர். ஐரோப்பாவின் கிழக்குப் பகுதிகளை உருசியாவிற்கு உட்படுத்தியதோடமையாமல் துருக்கியின் ஆட்சியிலிருக்கும் "டார்டனெல்ஸ்"பொறுப்பிலும் உருசியா இதுபோது பங்கு கேட்கிறது. போலந்தின் பெரும்பகுதியைத் தனக்கு உட்படுத்திய உருசியா தான் ஆண்டுநிறுவிய அரசாங்கத்தை ஏனைய வல்லரசுகளும் ஒப்பி ஆதரிக்கும் நிலைமையையும் ஏற்படுத்திக் கொண்டது. 'செக்கோஸ்லோவேகியா' வின் ஒரு பகுதியாகிய "ருதினியா" வையும் உருசியா தன்னுட்சிக்கு உட்படுத்திக் கொண்டது. இதனுல் செக்கோஸ்லோவேகியாவிற்கு ஒருபேரிழப்பு நேர்ந்துளது. ருமேனியாவிற்கும் செக்கோஸ்லோவேகியாவிற்கும்

நேரே ஏற்பட்டிருந்த தொடர்பு இதனால் அற்றுப் போகின்றது. டாஞ்சியர் ஆட்சிப் பொறுப்பில் உருசியா இதுபோது பங்கு கேட்கிறது. இனி, சூயஸ் கால்வாயிலும், பனமா கால்வாயிலுங்கூட உருசியா பங்கு கேட்கும் போலும்!

'டாஞ்சியர்' என்பது ஜிப்ரால்டருக்கு எதிரே ஆப்பிரிக்காவின் வடமேற்கு முனையிலுள்ள சிறு நிலப்பகுதி. இப்பகுதி உலகப் பெரும் போருக்கு முன் எல்லா உலக ஆட்சிக்கு இடமாயிருந்தது. அச்சுநாடுகளின் வெற்றி நிலைமை உச்சி நிலையிலிருந்தபோது "ஸ்பெயின்" நாட்டு எல்லா ஆட்சித் தலைவர் "பிராங்கோ" "டாஞ்சியர்" மீது பாய்ந்து அதனைக் கைப்பற்றிக் கொண்டார். மீண்டும் அப்பகுதியை நேச நாடுகளின் ஆட்சிப் பொறுப்பில் கொணர்தற்குப் பிரித்தானியரும், அமெரிக்கரும், பிரெஞ்சுக்காரரும் எண்ணினர். இதன் தொடர்பாய்ப் பிரெஞ்சில் ஒரு கூட்டம் நடத்த ஏற்பாடும் செய்யப்பட்டது. உருசியா உடனே விழித்துக் கொண்டு உருசியாவைக் கலந்து கொள்ளாமல் டாஞ்சியர் சம்பந்தமாக ஒரு முடிபும் செய்யக்கூடாதென நேச நாட்டினருக்கு அறிவுறுத்தி உள்ளது. செருமானியர் தோற்றபின் 'பாஸ்டா'மில் கூடிய மூன்று நேச தேயத்தலைவர்களும் கலந்து ஆயும்பொழுது, செருமானியரை எப்படி ஆட்சிபுரிவது? செருமானிய நாட்டின் எல்லையை எவ்வளவில் அமைப்பது? செருமானிய நாட்டாரிடமிருந்துபெறும் போரிழப்புத் தொகையை எவ்வாறு பங்கிட்டுக் கொள்வது? என்பனபோன்ற செய்திகள் ஆய்விற்கு வந்தன. இக்குழுவில் 6,600 கோடி வெண்பொற்காசுகளைப் போரிழப்புத்தொகையாகச் செருமானியரிடமிருந்து பெறுவது எனவும், அங்ஙனம் பெறுந்தொகையில் 100க்கு 56 பங்கினை உருசியா பெற்றுக் கொள்வதெனவும், ஏனைய 44 பங்கையும் பிரித்தன் 22-ம் அமெரிக்கா 22 மாகக் கூறிட்டுக் கொள்வதெனவும் முடிவு செய்துள்ளனர். இம்முடிவிலும் உருசியத் தலைவர் ஸ்டாலினே ஏனையோரை வென்று வாகை சூடியுள்ளார். யப்பானோடு அமெரிக்கரும், பிரித்தானியரும் போர் தொடுத்த காலையில் உருசியநாட்டினரும் ஆசியப் போரிலிறங்கி மஞ்சூரியாவைக் கைப்பற்றிச் சீனநாட்டினர்க் களித்து, அவர்களோடு ஒப்பந்தம் செய்து கொண்டுள்ளனர். இவ்வகையிலும் உருசியா சிறந்து மிளிர்கின்றது. இத்தகைய அறிவாற்றலும், அரசியல் தந்திரமும், பொறுப்பும் வாய்ந்த ஸ்டாலினைத் தலைவராகப்பெற்ற உருசியநாடு எதிர்காலத்திலும் மிகச் சிறந்தோங்கு மென்பதில் ஐயமுண்டோ?

(தொடரும்.)

கரந்தைப் புலவர் கல்லூரி
இளங்கோவடிகள் தமிழ்க் கழகம்
வெற்றிநாள் விழாக் கொண்டாட்டம்.

22—8—'45 புதன் மாலை 7-மணியளவில் கரந்தைப் புலவர் கல்லூரி மாணவரால் சங்கத் தலைவர், முத்தமிழ் வள்ளல், 'இராவு பகதூர்' உயர்திரு. A. Y. அருளாநந்தசாமி நாடார் அவர்கள் சீரிய தலைமையில் வெற்றிவிழா சிறப்பாகக் கொண்டாடப் பெற்றது. தலைவரவர்கள் தற்போதைய வெற்றியினால் உலகத்திற்கும் சிறப்பாக நமது நாட்டிற்கும் பல நன்மைகள் ஏற்படும் என்றும், இந்தியர் என்ற ஒரு சமுதாயமாக ஆக்கி நல்ல முறையில் நம்மை ஆண்டு வரும் ஆங்கிலேய அரசினரிடத்து நாம் நன்றி பாராட்டாது வெளியே போ என்று தக்க தருண மல்லாத நேரத்திற் கூறுவது நன்றல்ல என்றும், உலகத்திற்குப் பல இன்னல்கள் புரிந்தவர்களை யழித்து வெற்றி கொண்டவர்கள் எப்போதும் பாராட்டற்குரியர் என்றும், போரினால் நமது நாட்டில் இழப்பு மிகுதியும் இல்லாதபோதே நமக்கு மகிழ்ச்சி இவ்வளவென்றால் போரால் பெரிதும் தாக்கப்பெற்ற நாட்டு மக்கள் எத்துணை மகிழ்ச்சி யடைவர் என்று சிந்திக்கவேண்டும் என்றும் கூறினார்கள். பின்னர் திரு. சிவ. சண்முகசுந்தரம் பிள்ளை, கோ. சி. பெரியசாமிப் புலவர், G. இரத்தினம் பிள்ளை முதலியவர்களும் சில மாணவரும் வெற்றியின் தன்மையையும் அதனால் விளைய விருக்கும் நிலைகளையும் சிறப்பாக எடுத்தோதினர்

பேசிய மாணவருட் சிலர் முன்பு ஒருகால் கருணை வள்ளலாகிய தலைவரவர்கள் புலவர் கல்லூரிக்குத் தக்கதோர் கட்டிடம் போருக்குப் பின் கட்டித் தருவதாக வாக்களித்திருப்பதை நினைவூட்டிப் பேசினார்கள். தலைவரவர்கள் முடிவுரையின்போது "சண்டை முடிந்ததும் புகைவண்டி நிலையத்தில் வண்டி வண்டியாக இரும்புக்கம்பிகளும் சிமிட்டியும் வந்து குவிந்து விட்டதாக நாம் எண்ணக் கூடாது என்றும் சிமிட்டியும் கம்பிகளும் இடைத்தவுடன் பெரும் மாளிகையாக இல்லாவிட்டாலும் கல்லூரி நடத்துதற்கு வசதியான ஒரு கட்டிடம் கட்டித் தந்து விடுகின்றேன் இது குறித்து நீங்கள் மேலும் மேலும் கூறவேண்டாம். நான் முன்பே தான் சொல்லிவிட்டேன். அதை மறக்கவில்லை" என்றும் கூறி

ஞர்கள். சொல்லியதும் மாணவர் மகிழ்ச்சியினுல் காற்கடிகையளவு கையொலி செய்தனர். பின்னர்த் தலேவர் சுபேதார் சுப்பிர மணியம் போன்றவரைப் பாராட்டிப் பேசினர்.

பிறகு கல்லூரித் தலேவர் உயர்திரு. **பண்டித. P. R. மீனுட்சி சுந்தரம் பிள்ளே** யவர்கள் தலேவருக்கும் பேசியோர்க்கும் நன்றி கூறினுர்கள். இப்போரின் முடிவினுல் எவ்விதமான இன வேறு பாடுமின்றி ஒற்றுமையாய் வாழ்ந்தால் எவ்விதமான செயலேயும் ஆற்றலாம் என்பதை அறிந்து சாதி சமய வேறுபாடின்றி, கல்லூரி மாணவர்கள் ஒன்றுபட்டு வாழவேண்டும் என்றும், வித்துவான் தேர்வில் பெரிய வெற்றி யடைதல் உம்முடைய வெற்றி யென்றும், மண்டிலத்தில் முதன்மை நிலேயடைவதே கல்லூரியின் வெற்றி யென்றும், அன்றுதான் உமக்கு வெற்றி விழா அயர உரிமை யுண்டென்றும் சங்கத் தலேவரிடத்தில் அடிக்கடி கட்டிடம் வேண்டு கின்ற மாணவர்கள் அவர் மனமாற தாம் செய்யும் உதவி நல்லி டத்தை யடைகின்றது என்று விரும்பும் வகையில் நன்ருகப் படித் துத் தேர்வடையப் பாடுபட வேண்டும் என்றும் மாணவர்க்கறிவுறுத் திஞர்கள்.

பின்னர், திரு. சிவராமமுத்துகுமாரவேல் என்ற முன்னிலே (II) வகுப்பு மாணவர் அப்பொழுதே யாத்த "**வெற்றி முழக்கம்**' என்னும் இசைப்பாடலேப் பாடி எல்லோரையும் மகிழ்வித்தார்.

வந்திருந்தோரனேவருக்கும் சந்தனச்சராந்து, வெற்றிலே, பாக்கு, மிட்டாய் முதலியன வழங்கப் பெற்றன. சங்க வாழ்த்துடன் விழா இனிது நிறைவெய்தியது.

சங்கத்தலேவரவர்கள் முதன் முதலாக மாணவர் கூட்டத்திற்குத் தலேமை தாங்கி இன்முகத்தோடு இனிய கூறி எல்லோரையும் அருகிருக்கும்படி உடனமர்த்திக் கலந்து கொண்டது குறிப்பிடத் தக்கது.

இங்ஙனம்,

க. ப. கண்ணன்,

அமைச்சர்.

வீரம்.

வித்துவான். S. பொன்னுசாமி அவர்கள்,
திருச்சி அனைத்திந்திய வானொலியிற் பேசியது.

(முற்றொடர்ச்சி: துணர் 21, மலர் 5, பக்கம் 120)

கனியைப்பெற்ற ஒளவை,

"பெருமலை விடரகத் தருமிசைக் கொண்ட
சிறியிலை நெல்லித் தீங்கனி குறியா(து)
ஆதல் நின்னகத் தடக்கிச்
சாதல் நீங்க எமக்கீத் தனையே"

என்று அதியமான் கொடை வீரத்தைப் புகழ்ந்துள்ளார்.

இரப்போர்க்கு இல்லையெனாது கொடுத்துக் கொண்டிருந்த குமணவள்ளல் நாடிழந்து காடுசெல நேர்ந்தது. தீமையே தன் செயலெனக் கொண்ட அவ் வள்ளலின் இளவலாகிய இளங்குமணன், 'என் தமையன் தலையைக் கொணர்வார்க்கு ஆயிரம் பொன் பரிசில்' எனப் பறையறைந்து அறிவிக்கச் செய்தான். இதையறியாது பெருந்தலைச் சாத்தனார் என்ற புலவர், தன் வறுமை நோய் தீர்தற்பொருட்டுக் குமணனிடம் சென்றிரந்தார். அவன், 'என் நாட்டை இழந்தபோது என் மனம் சிறிதும் கலங்கிற்றில்லை, ஆனால் உம்மை 'இல்லை என' அனுப்ப என்மனம்அஞ்சுகின்றது. ஆகையின், இவ்வாளால் என் தலையைக் கொய்து, என் தம்பியிடம் தந்து ஆயிரம் பொன் பரிசு பெறலாம்' என்று கூறி வாள்தந்தான். அப்புலவர்,

பாடுபெறு பரிசிலன் வாடினன் பெயர்தலென்
நாடிழந் ததனினும் நனியின்னாதென
வாள்தந்தனனே தலையெனக் கீய...........

என்று, அவ்வரசன் தன்னுயிரையுங் கொடுக்கத்துணிந்த கொடை வீரத்தைப் புகழ்ந்து சென்றார்.

அர்ச்சுனன் கணைகளால், உடல் முழுதும் துளைக்கப்பட்ட கன்னன், போர்க்களத்தில் வேதிய வுருவில் தோன்றி, தன் புண்ணியத்தை இரந்து நின்ற மாயனை நோக்கி,

"ஆவியோ நிலையிற் கலங்கிய தியாக்கை அகத்ததோ
புறத்ததோ வறியேன்
பாவியேன் வேண்டும் பொருளெலாம் நயக்கும்
பக்குவந் தன்னில்வந் திலையால்

ஓவிலா(து) யான்செய் புண்ணிய மனைத்தும்
உதவினேன் கொள்கநீ........"

என்று கூறி, உடல் உதிரத்தால் நீர் வார்த்துக் கொடுத்து, கொடை வீரன் எனும் அழியாப் புகழ் பெற்றான்.

நிற்க, இவ்வள்ளல்களும், ஏனைய படைவீரம், கல்விவீரம், புகழ்வீரம் ஆகிய இவைகளுக்கு உரியோர்களும் மக்களுள் உயர்ந்தோராவர். இதனை உணர்ந்த நம் முன்னோர் இச்சிறந்த வீரர்களைப் பலவகையான் சிறப்பித்தும், வீரத்தை வளர்த்தும் வந்தனர். மக்கள் உள்ள நிகழ்ச்சியை நுண்ணிதின் ஆராய்ந்து அதனை உள்ளவாறு எடுத்துக் கூறியுள்ள நம் முன்னோர் திட்ப நுட்பம் செறிந்த அறிவினையுடையோர் என்பது எளிதில் உணரற்பாலது. இவர்களின் வீரத்தினையும், கூர்த்த மதியினையும் அறியுந்தொறும் அவர்வழித் தோன்றிய நம் முள்ளம் பெருமிதம் அடைகின்றதன்றோ?

தமிழ்ப் புலவர் ஒருவரின்

அறுபதாம் ஆண்டு விழா.

குறுநில மன்னரெனத் தகும் பெருநிலக்கிழவரும் தமிழ்ப்பெரும் புலவரும், திருவானைக்காவந்தாதி, உரையின் ஆசிரியரும் ஆகிய கச்ச மங்கலம் திருவாளர் சொ. சிங்காரவடிவேல் வன்னியமுண்டவம்பலகாரர் அவர்கட்கு; நிகழும் பார்த்திப ஆண்டு ஆடித் திங்கள் பத்தொன்பான் நாள் வெள்ளிக்கிழமை (3—8—'45) அறுபதாம் ஆண்டு நிறைவுற்றமை கருதி தெய்வவழிபாடு நிகழ்த்தி ஏழைகளுக்கு உணவும் அளிக்கப்பெற்றது. இவர்கள் எழுதிய திருவானைக்கா அந்தாதியைக் காட்டினும் அவ்வந்தாதிக்கு இவர்கள் இயற்றியுள்ள உரை மிக மிகச் சிறந்து மிளிர்கின்றது. சிறந்த உரையாசிரியரும் பாவாசிரியருமாய் இலங்கும் நம் வன்னியமுண்டார் அவர்கள் தமிழ்த் தொண்டாற்றிப் பல்லூழி வாழ வேண்டுகின்றேன்.

வெண்பா

பார்த்திபவாண் டாடிமதி பத்தொன்பாந் தேதிவெள்ளி
தீர்த்தவிரா மேச்சுரத்தில் சேரறுபான்—பூர்த்திமணம்
கண்டார் வியப்புறச்சிங் காரவடி வேல்வன்னிய
முண்டாருக் கேய்ந்ததென முன்.

இன்னணம்,
சி. இளங்கோவன்

சிறு சோறு.

வித்துவான். வே. வேங்கடராஜுலு ரெட்டியார் அவர்கள்.

(முற்றொடர்ச்சி: துணர் 21, மலர் 1, பக்கம் 7)

"அந்தோ" என்னுஞ் சொல்

'அந்தோ' என்னுஞ் சொல் இரங்கற் குறிப்பில், பண்டைக்கால முதல் தமிழ் நூல்களிற் பயின்று வருதலைத் தமிழறிஞர் அறிவர்.

'வெந்திறற் கூற்றம் பெரும்பே துறுப்ப
எந்தை யாகுல(?) வதற்பட லறியேன்
அந்தோ அளியேன் வந்தனென் மன்ற
என்னு குவர்கொல்எற் றுன்னி யோரே' (238)

என்று புறநானூற்றில் வந்துளது காண்க. இச்சொல் சிங்கள நாட்டுச்சொல் என்று பிற்காலத்து உரையாசிரியர் சிலர் எழுதினர். அண்மைக் காலத்தில் உரையாசிரியராயிருந்த திரு. வை. மு. சடகோப ராமாநுஜாசார்யர் 'ஹந்த' என்னும் வடசொல்லின் திரிபு என்று எழுதினர். ஆகலின், இச்சொல்லைக் குறித்து ஈண்டுச் சிறிது ஆராய வேண்டுவதாகின்றது.

தமிழ்ச் செய்யுட்களில் திசைச்சொல்லும் வடசொல்லும் பண்டு பண்டே வந்துள்ளன என்பது,

'இயற்சொல் திரிசொல் திசைச்சொல் வடசொல் என்
றனைத்தே செய்யு ளீட்டச் சொல்லே' (எச்சவியல் 1.)

என்னுந் தொல்காப்பியச் சூத்திரத்தான் அறியப்படும். இனி, திசைச்சொற்கு இலக்கணங் கூறியவழி,

'செந்தமிழ் சேர்ந்த பன்னிரு நிலத்துந்
தங்குறிப் பினவே திசைச்சொற் கிளவி' (எச்ச 4.)

என்று கூறியுள்ளார். இதனால் திசைச் சொல்லாவன—செந்தமிழ் நிலத்தைச் சேர்ந்த பன்னிரு நாட்டிலும் வழங்குஞ் சொல் என்பது தெளிவாகும். செந்தமிழ் நிலமாவது — வடவேங்கடம் தென்குமரி இவற்றுக்குட்பட்ட நிலம். இது,

"வடவேங்கடம் தென்குமரி
ஆயிடைத்
தமிழ்கூறு நல்லுலகத்து
வழக்குஞ் செய்யுளும் ஆயிரு முதலின்
எழுத்துஞ் சொல்லும் பொருளும் நாடி"

என்றமையானும், இதனுள் "தமிழ்கூறு நல்லுலகம்" என விசேடித்தமையானும், கிழக்கும் மேற்கும் எல்லை கூறாது தெற்கெல்லை கூறிய

வதனுல் குமரியின் தெற்காகிய நாடுகளை யொழித்து, வேங்கடமலையின் தெற்கும் குமரியின் வடக்கும் குணகடலின் மேற்கும் குடகடலின் கிழக்கும் ஆகிய நிலம் செந்தமிழ் நிலம் என் றுரைப்ப என்னுந் தெய்வச் சிலையாருரையினுல் வலியுறும். இவ்வுரையாசிரியர், 'பன்னிரு நில மாவன — வையையாற்றின் தென்கிழக்காகிய பொதுங்கர்நாடு அருவா வடதலை என்ப' என்று எழுதி, 'இவை செந்தமிழ் நாட்டு அகத்த' என்ருர். பின்னர், 'செந்தமிழ் சேர்ந்த பன்னிரு நிலம்' என்றதனுல், பி(பு)ற நாடு ஆகல் வேண்டும் என்பார் உதாரணம் காட்டுமாறு' என்று எழுதி, 'கன்னித் தென்கரை' என்னுஞ் சூத்திரத்தைக் காட்டி விளக்கினுர். நச்சினுர்க்கினியர் இப் பன்னிரண்டு நாடுகளையும் எழுதி, இவை பன்னிரு நிலத்தைச் சூழ்ந்த பன்னிரு நாடு என்ருர். உரையாசிரியரும் சேனுவரையரும் இந்நாடுகளைக் குறித்திலர்; அவர் பொங்கர்நாடு முதலியவற்றையே குறித்துள்ளார்.

தெய்வச்சிலையார் காட்டியுள்ள சூத்திரம் நன்னூலுரையில் மயிலைநாதர் காட்டியதுவே, ஆயின் சிறிது பாடபேதம் உளது. மயிலை நாதர் அப் பன்னிரண்டு நாட்டின் பெயரை எழுதி, 'இவற்றின் மொழி களும் வந்தவழி அறிந்து கொள்க' என்றுரேயன்றி உதாரணம்கொடுத் திலர். தெய்வச்சிலையார், 'அந்தோ என்பது சிங்களவர் ஐயோ என்ப தற்கு இட்ட பெயர்' என்று எழுதியுள்ளார். நச்சினுர்க்கினியர் 'இனிச் சிங்களம் அந்தோ என்பது' என்று எழுதியிருக்கின்ருர். இவர்க ளல்லாமல், பழையவுரையாசிரியர் பிறர் அந்தோ என்பதைச் சிங்களச் சொல் என்று எழுதியிருக்கின்றனர் எனத் தெரியவில்லை.

மயிலைநாதர்,

'தெரிநிலை தேற்றம்......இன்னன இடைப்பொருள்'

என்னுஞ் சூத்திரத்தின் உரையில், "இன்னன" என்றதனுற் சில வருமாறு:—

தொறு தோறு ஞெரேர் அந்தோ அன்றே......என்பன' என்று எழுதி, பின்னர், 'அந்தோ அன்னே......என்பன இரக்கங் குறித்து வரும். "அந்தோ விசயை பட்டன"........' என்று உதாரணமும் காட்டியுள்ளார்.

இவற்ருல் அந்தோ என்பது தமிழ்ச்சொல்லே என அறியலாகும். இனி, இவர்தங் கூற்றை நோக்குவோம்: தொல்காப்பியத்தில் இடை யியலில்,

'நன்றீற் றேயும் அன்றீற் றேயும்
அந்தீற் ருேவும் அன்னீற் ருேவும்
அன்ன பிறவுங் குறிப்பொடு கொள்ளும்' (34)

என்னுஞ் சூத்திரம் உளது. இச் சூத்திரத்தில் நான்கு சொற்கள் சொல்லப்பட்டுள. அவை:

"நன்றீற்று ஏ — நன்றே என்பது
அன்றீற்று ஏ — அன்றே ,,

அந்தீற்று ஓ — அந்தோ என்பது
அன்னீற்று ஓ — அன்னே ,,

உரைகாரரனைவரும் நன்றே என்பது முதலிய சொற்களையே காட்டியுள்ளது காண்க. நச்சினார்க்கினியர்,

‘அந்தோ எந்தை அடையாப் பேரில்’
‘அன்னே, என்னுவதுகொல் தானே’

என்னும் அடிகளை உதாரணங் கொடுத்து, ‘இவ் வேகார வோகாரங்கள் பல சொல்லோடு அடுத்து வாராது இச்சொற்களையே அடுத்துப் பொருள் வேறுபட்டு நிற்றலின் இவற்றைப் பெயர் தந்து வேறு கூறினார்’ என்று விளக்கம் எழுதியுள்ளார்.

இனி, அந்து என்னுஞ் சொல்லின் அமைபு நோக்குவோம்: அந்து என்பது அன் என்பதனோடு து — சேர்ந்து அமைவுற்றது. அன் + து = அந்து, முன் + து = முந்து என்றமைந்துள்ளது. ஈண்டு ஒப்பிடற்பாலது. இவ்வாறே பிந்து, உந்தை முதலியனவும் வழங்குகின்றன. அன் என்பதனோடு து—சேர்ந்து அமைந்த மற்றொரு வடிவம் அற்று என்பது. அன் + து = அற்று. துவ்வொலியை நன்கு ஒலிப்பின் அதன் வன்மையினால், மேல் நின்ற மெல்லெழுத்தும் வல்லெழுத்தாகத் திரியும். பின்றை, பிற்றை என்பன ஈண்டு உளங்கொளற் குரியன. அற்று + ஓ = அற்றோ என்றாகும். நிற்க,

அந்து என்பது அன்னது என்பதன் ஒரு வடிவம். மலையாளத்தில் எந்து என்று வழங்குஞ் சொல் தமிழில் என்னது என்று வழங்குகின்றதறிக. அந்தோ என்பது அன்னதோ என்னும் பொருளதாகும்.

அந்தோ என்னுஞ் சொல்லின் பொருளில் இக்காலத்தில் அப்படியா! என்னுஞ் சொல் வழங்குகின்றது. அஃது இரங்கற் குறிப்பும் வியத்தற் குறிப்பும் உளதாதல் அறிக.

இதுகாறுங் கூறியவற்றால், அந்தோ என்னுஞ் சொல் சிங்களச் சொல் என்றலும் வடசொல்லின் திரிபு என்றலும் ஆசிரியர் தொல்காப்பியனார்க்கும் மயிலைநாதர் முதலிய உரையாசிரியர்க்குங் கருத்தன்று என்பதும், அவர் தமிழ்ச் சொல்லாகவே எடுத்துக் கூறியுள்ளனர் என்பதும் தெளிவாகும். ஆகலின், அதனைச் சிங்களச் சொல் என்று நச்சினார்க்கினியர் எழுதியிருப்பது வியப்பினைத் தருகின்றது.

(தொடரும்.)

ஆரியன் தமிழ்ப் புலமை.

வித்துவான். செ. வேங்கடராமச் செட்டியார்,

S. V. O. கல்லூரி, திருப்பதி.

தமிழ்மொழி செவிக்கினிய சொல்லழகும் பொருளழகும் உடைய தாய் உலகெங்கணும் பரந்து அறிஞர் உள்ளங்களைக் கொள்ளை கொள்ளும் பெருஞ் சிறப்போடு பிறங்கிற்று, சங்க காலத்தென்பது யாவர்க்கும் ஒப்ப முடிந்தது. வடவேங்கடம் தென்குமரியாயிடைத் தமிழ் கூறும் நல்லுலகத்துள்ள பல நாட்டவரும் பலவினத்தவரும் செவ்விய மதுரஞ் சேர்ந்த நற்றமிழில் சீரிய கூரிய தீஞ்சொற்களைக் கொண்டு புதுவது புதுவதுவாகக் கவி புனைந்து அவற்றைப் புலவனும் புரவலனுமாய பாண்டியன் ஆண்ட மாடமதுரையின்கண் வான்றோய் நல்லிசைச் சான்றோர் குழீஇய துங்கச் செந்தமிழ்ச் சங்கத்திலிருந்து பலரும் வியக்க நயக்க அரங்கேற்றுவர். இதனை, "நிலனுவில் திரிதரு நீண்மாடக் கூடலார், புலனுவில் பிறந்த சொல் புதிதுண்ணும் பொழுதன்றோ" என்னும் பாலைக்கலியால் உணரலாகும். இங்ஙனம் தமிழ் நாட்டவர், மக்கள் உள்ளத்துணர்ச்சியாக எழுகின்ற காதல் வீரம் என்ற இரண்டையும் அகமும் புறமும் என இருதிறனாக விரித்துக் கூறினர். மக்களுள்ளத்து எழுகின்ற மிக நுண்ணிய சீரிய உணர்ச்சிகளை உணர்த்துதற்கும் புறத்திணையினும் அகத்திணையே நனி சிறந்தமையின் பண்டைக்காலத் தண்டமிழ்ப் புலவர்கள் அகத்திணைப் பாடல்களை அதிகமாகப் பாடலாயினர். அதனையே தமிழ் என்றும் பகர்ந்தனர்.

தமிழின் சிறப்பைத் தமிழ் நாட்டவரேயன்றிப் பிறநாட்டவரும் உணர்ந்து போற்ற வேண்டும் என்ற நல்லுணர்ச்சி பண்டைப் புலவர்க்குப் பெரிதும் இருந்தது. இதனாலன்றோ குறிஞ்சி பாடுவதில் பெருஞ் சிறப்புற்ற பொய்யா நாவிற் கபிலர், ஆரிய அரசன் பிரகத்தனைத் தமிழறிவித்தற்குப் பத்துப் பாட்டில் ஒன்றாகிய குறிஞ்சிப் பாட்டைப் பாடியருளினர். அங்ஙனம் பிரகத்தனைத் தமிழ் அறிவித்ததாகப் பாடிய பாடலில் தமிழ் மொழியைப் பற்றி யாதொன்றும் கூறப்படாமல் தமிழகத் துறையையே கூறியிருப்பதை நோக்குமிடத்து அகத்திணையைச் சிறப்பு நோக்கித் தமிழ் என்று பண்டைப் புலவர் கூறி வந்தனர் என்பது பெறப்படும். "தள்ளாப் பொருளியல்பின் தண்டமிழாய் வந்திலார் கொள்ளாரிக்குன்று பயன்" என்ற பரிபாடற் பகுதியாலும் இது விளங்கும்.

இங்ஙனம் தமிழின் சிறப்பை ஆரிய அரசன் பிரகதத்தனேயன்றி வேறுமோர் ஆரிய அரசன் நந்தமிழ்ப் புலவர்பால் நன்குணர்ந்து அத்தமிழின் செவ்விய இனிய சொல்லழகிலும் பொருளழகிலும் ஈடுபட்டுத் தானும் அவ்வாறு தீந்தமிழ்ப் பாடல் பாடவேண்டும் என்ற

பேரவா உடையனாய்த் தமிழ் கற்று வல்லனாய் அகத்திணையில் ஒரு செய்யுள் செய்து புலவனும் பேறு பெற்றுளன். தமிழ்ப் புலவர் களேயன்றி மொழிபெயர் தேயத்தவனான ஆரிய அரசன் ஒருவன் தான் தமிழ் உணர்ந்ததேயன்றிப் பிறர்க்கும் தமிழ் உணர்த்த வல்லனுயினன் என்பதை நோக்குமிடத்து நம்மனோர்க்கு வியப்பும் நயப்பும் தோன்றுவது இயற்கை யன்றோ? தமிழ் கற்பதற்கும் பிறமொழி வாணரோடு பயின்று அவர்க்குக் கற்பிப்பதற்கும் போதிய வசதி நிறைந்த இக்காலத்தில் பண்டைப் பாடல் போன்ற இனிய தனித் தமிழ்ப்பாடலைத் தமிழராகிய நாமே இயற்ற இயலாத நிலையில் இருக்கும்பொழுது பிறநாட்டுப் பிறமொழியாளரைச் செய்யுள் செய் விக்கும் ஆற்றலை எங்ஙனம் பெறப்போகின்றோம். பிற நாட்டாரோடு பழகுவதற்குரிய பெரிய வசதியற்ற சங்க காலத்து ஆரிய அரசன் ஒருவனைத் தமிழ்ச் செய்யுள் இயற்றச் செய்த புலவரை என்னென்று வியப்பது! என்னென்று புகழ்வது!!

தமிழ் நாட்டில் பிறந்து தமிழ் நாட்டில் வளர்ந்து தமிழ்த்தாய் தமிழ் பாடித் தாலாட்டத் தமிழினிமையுணர்ந்து தமிழில் மழலை மொழி பயின்று தமிழ் கற்றுப் புலவராம் பேறுபெற்ற தமிழ்ப் புலவரோ டொப்பத் தமிழ்ப் புலமை நடாத்திய ஆரிய அரசன் யாவன்? ஆரிய நாட்டில் பிறந்து வளர்ந்து ஆரிய மொழி பயின்று ஆரியர் பழக்க வழக்கங்களில் தோய்ந்து தோய்ந்து ஆரிய அரசன் இயற்றிய தமிழ்ச் செய்யுளெது? அதன் இயல்பென்னை? என்பன வற்றை ஆராய்ந்தறிவது நம் கடமையன்றோ? எனவே காண்போம்.

பத்துப்பாட்டு, எட்டுத் தொகையாகிய சங்க நூல்களில் ஆரியர் என்ற பெயர் தாங்கிச் செய்யுள் செய்தார் "ஆரிய அரசன் யாழ்ப் பிரமதத்தன்" என்பானையன்றி வேறு எவருமிலர். எனவே யான் குறித்த புலவன் இவனே என்பது தெளிவு. இவன் குறுந்தொகையில் நூற்று எண்பத்து நான்காம் பாடலைப் பாடியுள்ளான். ஆரியம் நன்று தமிழ் தீதென உரைத்த காரியத்தால் காலக் கோட்பட்ட நன்று தீதறியாதவனைப் போலாது இவ்வரசன் தமிழ் மொழியை மதித்துத் தானும் தமிழ்ப் புலவரோடு ஒப்ப மதிக்கப் படவேண்டும் என்று விழைந்ததும், விழைந்தபடி செய்யுள் செய்துள்ளதும் நாமெல்லாம் போற்றிப் புகழ்வதற்குரிய செயலே யாம். இவன் இச் செய்யுளை இயற்ற எத்துணை நூல்களைப் பயின்றிருக்கவேண்டும். தமிழ ருடைய புலனெறி வழக்கத்தை எவ்வளவு ஆராய்ந்திருக்க வேண்டும் என்பதும் கூறுமலே விளங்கத் தக்கன. இங்ஙனம் பயின்றும் ஆய்ந்தும் ஆரிய இயல்பு நீங்கினதாகத் தெரியவில்லை என்பதைப் பின்னர்க் காணலாம். "உப்பொடு நெய் பால் தயிர் காயம் பெய்தடினும் கைப்பறுப் பேய்ச்சுரையின் காய்" என்ற அனுபவம் முதிர்ந்த முனிவர் வாக்குப் பொய்க்குமோ? ஆரியர் பேசுந் தமிழை நகைச் சுவைக்கு உதாரணமாகப் பேராசிரியர் காட்டியுள்ளார் என்பதை எல்லோரும் அறிவோம். பேசுந்தமிழே அத்தகைய தாயின் பாடுந்தமிழைப் பற்றிக் கூறவா வேண்டும்? கான மயிலாடக் கண்டிருந்த வான்

கோழி தானும் தன் பொல்லாச் சிறகை விரித்தாடியது தான் நினை விற்கு வருகின்றது.

முன்னர் அவன் பாடிய செய்யுளின் துறையின்ன தென்பதை விளக்கி மேல் செய்யுளைக் காண்பாம். "கழறிய பாங்கற்குக் கிழவன் உரைத்தது" என்பது துறை. இத்துறையின் விளக்கம்: தன்னை இடித்துரைத்த பாங்கனை நோக்கி "சிற்றூரிடத்துச் செல்பவர் யாரும் தலைவியின் கண் வலையில் படுவர்; என்னெஞ்சம் அதில் பட்டது" என்று கூறியதென, உ. வே. சாமிநாதையர் அவர்களால் வரையப் பட்டிருக்கிறது. உருவினும் திருவினும் கற்பினும் பொற்பினும் தன்னேரில்லாத் தலைவியை ஊழ் வயத்தான் எதிர்ப்பட்டுக் கூடிய தன்னேரில்லாத் தலைவன் பின்னர்ப் பெறவியலாது மெலிவான். தலை வன் மெலிவு கண்ட பாங்கன் இம்மெலிவிற்குக் காரணம் என்னென்று வினைய வழித் தலைவன் திருவினும் சிறந்த உருவினளாய ஒருத்தியே காரணம் என்பான். அது கேட்ட பாங்கன், இங்ஙனம் ஒரு பெண் காரணமாக மெலிதல் நின் பெருமைக்கு ஏலாதென இடித்துரைப்பான். அவ்விடித்துரையைப் பொருத தலைவன் மனமழிந்து பாங்கற் குரைப் பதையே "கழறிய பாங்கற்குக் கிழவன் உரைத்தது" எனத் துறை வகுப்பர். இனி அச்செய்யுளைக் காண்பாம்.

"அறிகரி பொய்த்த லான்றோர்க் கில்லை
குறுக லோம்புமின் சிறுகுடிச் செலவே
இதற்கிது மாண்ட தென்னு தகற்பட்டு
ஆண்டொழிந் தன்றே மாண்முடிப் பாவை
நுண்வலைப் பரதவர் மடமகள்
கண்வலைப் படூஉங் கானலானே"

(184 குறுந்) என்பது.

இதன் பொழிப்பு: "மயிலினது பீலிக்கண்ணைப்போன்ற மாட்சி மைப்பட்ட முடியையுடைய பாவை போல்வாளாகிய நுண்ணிய வலை யினையுடைய நெய்தனில மக்களுடைய மகளது கண் வலையின்கண் ஆண்டுச் செல்வார் அகப்படுகின்ற கடற்கரைச் சோலையிடத்து மாட் சிமைப்பட்ட தகுதியுடைய என்னெஞ்சம் இப் பொருளுக்கு இப் பொருள் ஏற்ற மாட்சியையுடையது என்று ஆராய்ந்து பாராது அக் கண்வலையின்கண்பட்டு அக் கானலிடத்தே தங்கியது; அறிவான் அமைந்த பெரியார்கட்குத் தாம் கண்டறிந்த தொன்றை மறைத்து பொய்க்கரி கூறும் இயல்பு இல்லை; ஆதலின் அச்சிற்றூரிடத்துச் செல்லுதல் அடைதலைப் பரிகரிமின்" என்பது. இக் கருத்தை நோக்குவோமாயின் இப்பாடல் தமிழ்ப் புலனெறி வழக்கத்தைத் தழுவியதன்று என்பது தெற்றென விளங்கும். சொற்கள் தமிழால் ஆக்கப்பட்டிருப்பவையன்றிக் கருத்து முழுமையும் ஆரியக் கருத்தே என்பதை எவரும் மறுர் என்று எண்ணுகின்றேன். தலைவன் பாங்க னுக்குக் கூறும் ஒவ்வொரு சொல்லையும் கூர்ந்து நோக்க வேண்டும். தலைவன் தன்னெஞ்சத்தை மாண்டகை நெஞ்சம் என்று சொல்லிக் கொள்கின்ருன். வேண்டுமாயின் சொல்லிக்கொள்க. அத்தகைய

நெஞ்சம் "இதற்கிது மாண்ட தென்னாது அதற்பட்டு ஆண்டொழிந்த தன்றே" என்றும் கூறுகின்றான். இஃதென்ன பொருத்தம்? நல்லோர் நெஞ்சம் தக்குழியன்றிச் செல்லாது என்பது இங்கு மறுக்கப் படுகின்றது. இப் பொருளுக்கு இப் பொருள் ஏற்ற மாட்சியுடையது என்று ஆராயாது அக் கண்வலையில் அகப்பட்டது என்ற கருத்தை நோக்கின், இத் தலைவனும் இத் தலைவனால் காதலிக்கப் பட்ட தலைவியும் "பிறப்பே குடிமை" என்று எண்ணப்படும் இயல் புகளெல்லாம் ஒத்த காதலர் ஆவாரோ? தன் தகுதிக்கு ஏலா விடத்தில் தன்னெஞ்சம் தங்கிய தென்ற கருத்திலன்றோ அவன் கூறுகின்றான். இங்ஙனம் தகாத விடத்தில் அகப்பட்டுக்கொண்ட தன்னெஞ்சினை "மாண்டகை நெஞ்சம்" என்றது எவ்வளவு பொருத்தம் என்பது நன்கு விளங்கும். இனிப் பரதவர் மடமகள் கண்வலைப் படூஉங்கானல் என்கின்றான். நெய்தனில மக்களுடைய மகளின் கண்களாகிய வலையில் ஆண்டுச் செல்வார் அகப்பட்டுக்கொள்ளும் கடற்கரைச் சோலையாம். என்னே பெண்டின் கற்பின் பெருமை! என்னே கற்பின் மாண்பு! ஒரு பெண்ணினுடைய கண்வலையில் ஆண்டுச் செல்வோரனைவரும் அகப்படுவாரென்றால் அப் பெண் தன்னேரில்லாத் தலைவியாவாளா? அத்தகைய பெண்ணின் கண்ணில் அகப்பட்டு விழிக்கும் ஆடவனும் தன்னேரில்லாத் தலைவனாவானா? தமிழ் நாட்டில் இழிந்தவர்களாகக் கருதப்படுகின்ற பரத்தைக்குள்ள பெருமைதானும் இங்குக் கூறப்படும் தலைவிக்கு இல்லையே? இளங்கோவடிகள் கூறிய மாதவியின் பெருமையோடு இத் தலைவியை ஒப்பிட்டு நோக்கின் யார்க்குச் சிறப்புக் கொடுப்பது? சீத்தலைச்சாத்தனார் பரத்தையின் மகளாகிய மணிமேகலையின் பேரழகைச் சிறப்பித்துக் கூறும்போது "ஆடவர்கண்டால் அகறலுமுண்டோ, பேடியரன்றோ பெற்றியினின்றிடின்" என்று கூறிவிட்டதையே சிறிது தாழ்வானதாகத் தமிழுலகம் எண்ணி இரங்குகின்றதே. பரத்தையின் மகளைக் கூறும் தகுதியிலும் இத் தலைமகள் கூறப்படவில்லையே என்பதை எண்ணுந்தோறும் இரக்கம் பெரிதாகவில்லையா? தமிழர் மரபைத் தமிழர் கற்பைச் சிறிதும் கருதவில்லை. கற்புடைப் பெண்டிர் பிறர் நெஞ்சு புகார் என்ற தலைசிறந்த தமிழர் பேரறத்தைக் கண்ணுற்றிலான்போலும். கையினால் மெய்யுற்றுச் சீதையை இராவணன் எடுத்தானென்று முதனூற் புலவன் கூறவும் கவிச்சக்ரவர்த்தியாம் கம்பர், தீண்டாது நிலம் பெயர்த்தெடுத்தான் எனத் தமிழர் கற்பை விளக்கிய பெருமித அறிவு ஆரிய அரசனுக்கு எங்ஙனம் வரும்? உன்னினன் பிறன் என்பதை உணர்ந்த மருதி, தன்னுயிர் மாய்க்க எண்ணிய வரலாற்றையேனும் எண்ணியறிந்தானில்லையே.

இவ்வாறு பிறர் உள்ளத்தைத் தன் கண்வலையில் அகப்படச் செய்யும் தலைவி இருக்கும் இடத்தில் பாங்கனைப் போதல் வேண்டாமென்று தலைவன் தடுக்கின்றான். ஏனென்றால், அப் பாங்கனும் அவள் கண்வலையில் படுவது திண்ணம் என்பது அவன் எண்ணம் போலும். தலைவன் காதலித்த ஒரு மங்கையின் கண்வலையில் பாங்க

னும் படுவானென்றால் பாங்கன் நிலையை என்னென்றுணர்த்துவது? இங்ஙனம் தான் காதலித்த மங்கையையும், தன் பாங்கனையும் இழிந்த நிலையில் எண்ணுகின்ற தலைவன், "அறிகரி பொய்த்தல் ஆன்றோர்க் கில்லை" என்கின்றான். இங்ஙனம் கூறிய கருத்தைக் கூர்ந்து நோக்கின் தலைவன் தன்னைச் சான்றோன் என்று மதித்திருக்கின்றான் என்பது பெறப்படும். ஒருவனுக் குரிமைபூணாது கண்டவர்களை எல்லாம் மையல் நோயால் நையலுறச் செய்யும் தையலைக் காதலித்துத் தன்னைப் போலத் தன் பாங்கனும் காதல்கொள்ளப் போகின்றான் என்று கருதி, குறுகலோம்புமின் சிறுகுடிச் செலவு, என்று கூறிய இவன், சான்றாண்மை மிக்க ஆன்றோனாயின் இவனால் கூறப்படும் இழிந்தவர் நிலை எத்தகையதோ அறியேம். பல சொல்லி யென்? இப் பாடல் தமிழர் புலனெறி வழக்கத்தை மீறியது; அன்பினைந்திணையில் வைத் தெண்ணுதற்கு உரியதன்றென்பது மட்டிலுமன்றிப் பெருந்திணையி லும் பொருந்துதற்குரியதன்று என்று திண்ணமாகச் சொல்லி விடலாம்.

ஆரியர்க்காயின் ஒருத்தியை வலிந்து பற்றிச் சேர்தலும் களித் தோள்மாட்டும் துயின்றாள்மாட்டும் சேர்தலும் மறையில் கூறப் பட்ட மன்றலாகலாம். தமிழர் அவற்றை விலங்கின் செயலினும் இழிந்ததாக எண்ணுவதன்றி மக்கள் செயலாக எண்ண ஒருப்படார். எனவே இப்பாடல் மெய்யுற்றறியாத இருவர்பால் நிகழ்ந்த காதலை உணர்த்துவதென்றோ, தன்னேரில்லாத் தலைவன் கூறியதென்றோ தமிழர் மதியார் என்பது திண்ணம். அங்ஙனம் இருக்க இப் பாடலைக் குறுந்தொகையில் சேர்க்கக் காரணமென்னையெனின்? யாழ்ப் பிரமதத்தன் அரசனும் ஆரியனுமாக இருந்த காரணத்தால் அவன் வேண்டுகோட் கிணங்கிச் சேர்த்துக்கொண்டிருத்தல் வேண்டும். ஒருவன் வேண்டுகோட்காகவோ அவன் மதிப்பிற்காகவோ தகுதி யற்ற பாடலைச் சேர்ப்பது தகுதியாமோ? எனின் தகுதியில்லாத தாயினும் ஆரியர் பாடும் பாடல் இவ்வாறு இருக்கும் என்று பின் னுள்ளோர் அறிந்துகொள்ளலாய பயன்கருதிச் சேர்த்தார்கள் என்றுதான் கொள்ளவேண்டும்.

ஆரிய அரசன் யாழ்ப்பிரமதத்தன் பாடிய இத்துறையில் தமிழ்ப் புலவர் பாடியுள்ள பாடலை உடன்வைத்து நோக்குவோமாயின் ஆரி யன் பாடலின் உயர்வு தாழ்வு நன்கு தெரியப்படும். எனவே காண்பாம்.

"இடிக்குங் கேளிர் நுங்குறை யாக
நிறுக்க லாற்றினோ நன்று மற்றில்ல
ஞாயிறு காயும் வெவ்வறை மருங்கிற்
கையி லூமன் கண்ணில் காக்கும்
வெண்ணெ யுணங்கல் போலப்
பரந்தன் றிந்நோய் நோன்றுகொளற் கரிதே"

—(குறு-58)

என்பது காண்க. இப்பாடலைப் பாடியவர் வெள்ளி வீதியார் ஆவர்.

இதன் பொழிப்பு : "இடித்துரைக்கும் நண்பரே, நுமது காரியமாக என் காம நோயை நிறுத்தலைச் செய்தால் மிக நன்று; எனது விருப்பம் அது; சூரியன் வெயிலெறிக்கும் வெம்மையுடைய பாறையினிடத்தே கையில்லாத ஊமையன் தன் கண்ணிலே பாதுகாக்க முயலுகின்ற உருகிய வெண்ணெயைப் போல என்பாலுண்டான இக்காம நோய் பரவியது; பொறுத்துக்கொண்டு நீக்குதற்கு அரியதாகின்றது" என்பது. இக்கருத்து எவ்வளவு உயர்வாகத் தூய்தாக இருக்கின்றது. இதன்கண் தலைவியின் கண்வலையோ, பாங்கன் ஓட்டை மனமோ, தலைவன் தகுதியற்றவளைக் காதலித்தான் என்ற நிகழ்ச்சியோ கூறப் படவில்லை. பாங்கன் இடித்துரைக்காகத் தடுக்க வியலாத பெருங் காதலையே தலைவன் விரித்துரைக்கின்ருன். இவ்வாறு கூறுவதே தமிழர் மரபு. தலைவன் காதல் மிகுதியைக் கண்ட பாங்கன் தலைவி யின் இயலிடம் வினவிச் சென்று, கண்டு வந்து கூறித் தலைவன் காதற்குத் துணை செய்வான். இதுவே பொருத்த முடைத்து. தலைவி யுள்ள இடத்தில் பாங்கனைப் போக வொட்டாது தடுத்தால் அப் பாங்கனுல் தலைவனுக்கு என்ன நன்மையுளதாகும் என்று தோன்ற வில்லை. இன்னும் மிளைப்பெருங் கந்தன் என்னும் புலவன் பாடியுள்ள கருத்தைக்காட்டி இக்கட்டுரையை முடிக்கலாம். "காமம் காமம் என்று உலகினர் அதைக் குறை கூறுவர்; அக்காமமானது புதியதாகத் தோற்றும் வருத்தமும் நோயுமன்று, நுண்ணிதாகி மிகுதலும் குறை தலும் இலது; யானை தழையுணவை மென்றுதின்ற அதனுல் கொண்ட மதத்தைப் போலக் கண்டு மகிழ்வாரைப் பெற்ருல் இக்காமம் வெளிப் படும் செவ்வியை உடையது" என்பது கருத்து. இக்கருத்துத் தமிழர் காதலின் பெருமையை எவ்வளவு நன்ருக விளக்குகின்றது என்பதை நோக்க நோக்க மகிழ்ச்சி மிகுகின்றது. ஆரியர் எண்ணுவது போன்று இழிந்த காமத்தை உணர்த்தாது காணத் தக்கவர்களைக் கண்டால் வெளிப்படுங் காதலை உணர்த்தினமையின் தலைவன் ஒழுக்கத்தின் உயர்வும் உள்ளத்தின் தூய்மையும் நன்கு விளங்குகின்றன. இத் தலைவனுல் காதலிக்கப்பட்ட தலைவியின் பெருமையும் இனிது பெறப் படுகின்றது. இஃதன்ரே அன்பினைந்திணை? இஃதன்ரே உலகிற்கு உய்தி தரத்தக்கது? அறிவுடை ஒருவன் வழி உலகம் செல்லுமாகலின் அவன் செய்யும் பாடல்கள் உலகத்தை ஒழுக்க நெறியில் நிறுத்த வேண்டுமன்ரே? அங்ஙனம் உணர்த்தாத பாடல் புலவன் பாட லாமா? என்பதை அறிதல் வேண்டும். ஆரிய அரசன் யாழ்ப் பிரம தத்தன் பாடிய பாடலைப் படிப்போர் என்ன எண்ணுவர்? ஒருவன் தகுதியற்றவளையும், பலரைக் கண்வலையில் அகப்படச் செய்யும் தன்மையளையும் காதல் செய்யலாம் என்றும், ஒருத்தி பலரைக் கண் வலையில் சிக்கச் செய்தால் தான் தன்னேரில்லாத் தலைவியாகலா மென்றும், அன்ரே எண்ணுவர். எனவே இத்தகைய பாடல் தமிழர் கற்பு நெறிக்கு மாருனது என்பதை உணர்த்துவதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

ஐயம்பேட்டையில் நிகழ்ந்த
தமிழிசைமாவட்டத் தமிழிசைமாநாட்டில் தலைமைதாங்கிய
முத்தமிழ் வள்ளல் இராவுபகதூர்
A. Y. அருளாநந்தசாமி நாடாரவர்கள் ஆற்றிய

தலைமை உரை.

தமிழிசை வளர்க்குந் தகைமைசால் அன்பீர்!

தமிழிசைவளனைத் தகுமுறையிற் போற்றுவான்வேண்டி ஈண்டுக் குழுமியுள்ள நீவிர் தமிழிசைப் பயிற்சியில்சிறிதுந் தோயாத என்னைத் தலைமை தாங்கக் கேட்டுக் கொண்டீர்கள். யானும் தங்கள் வேண்டுகோளைப் புறக்கணிக்க இயலாது ஏற்றுக்கொண்டு, தலைமை தாங்க இவண்போந்து நிற்கின்றேன். தமிழராய்ப் பிறந்தா ரெல்லாரும் தமிழிசையை வளர்க்கக் கடமைப் பட்டுள்ளனர். தமிழிசை வளர்ச்சியில் நாட்டங்கொண்ட ஆண் பெண் யாவரும் தலைமை தாங்கலாம், தமிழிசை பாடலாம் தமிழிசை குறித்துப் பேசலாம் எனும் உண்மையைத் தமிழிசை மாநாட்டில் என்னைத் தலைமை தாங்கச் செய்தமையாலும் பிற நிகழ்ச்சிகளில் இசைப்பற்றுள்ள ஆண் பெண் யாவரும் கலந்து நின்று தொண்டாற்றுகின்றமையாலும் இம் மாநாட்டின் மூலந் தாங்கள் மெய்ப்பித்துக் காட்டியுள்ளீர்கள்.

இசைக்கு உலகம் மிக எளிமையாக அடிமை ஆகின்றது. உயர்திணைப் பொருளாயுள்ள மக்களே அன்றி உயர்வு அல்லாத திணைப் பொருள்களும் இசைக்கு அடிமைப் படுகின்றன என நம் இலக்கியங்கள் நமக்கு அறிவிக்கின்றன. நல்ல பாம்புகளை இசை கூட்டிப் பிடித்து அவற்றின் நச்சுப் பற்களைப் பிடுங்கி எறிந்து விட்டுப் பாம்பாட்டிகள் மேலும் இசை கூட்டி ஊதி அப்பாம்புகளை ஆடச் செய்து மக்களுக்குக் காட்டிப் பிச்சை ஏற்றுப் பிழைக்கின்ற செயலால் நச்சரவுகளும் இசைக்கு இணங்குதலை யாம் நன்கு அறிகின்றோம். இசைக்கு நச்சுப் பாம்புகளே மயங்கி அடிமைப்படுமானால் கட்செவியன்றிப் பிற செவி பெற்ற மக்கள் மயங்கி அடிமைப்படுதல் வியப்பாமோ?

இசை வடிவாய் இறைவன் விளங்குதலைக்கண்ட பண்டைக் காலப் பெரியோர்கள் இறைவனை இசையாகவும் இசைப்பயனாகவும் வைத்துப் போற்றினார்கள். "ஏழிசையாய், இசைப்பயனாய்" எனவும், "பண்ணிடைத் தமிழொப்பாய், பழத்தினிற் சுவையொப்பாய்" எனவும் வரூஉம் சுந்தரர் திருமொழியான் இஃது உறுதி செய்யப்பெறும். இசைப்பாக்களைக் கேட்டு இறைவன் எளி வந்து அடியார் வேண்டியவற்றைச் செய்தான் எனவுங் கூறுகின்றனர். "மாயிரு ஞாலம்" எனத் தொடங்குந் தேவாரப் பாட்டில் "கழுமல ஊரர்க்கு அம்பொன்

ஆயிரங் கொடுப்பர் போலும் ஆவடுதுறையனுரே" எனத் திருஞான சம்பந்தர்க்கு, ஆயிரம் பொன் திருவாவடுதுறையில் இறைவன் அளித் தமை குறிக்கப்பெற்றுளது. சம்பந்தர்க்கு இறைவன் தாளம் அளித்து, ஆதரித்ததை,

"நாளும் இன்னிசையால், தமிழ்பரப்பும் ஞானசம்பந்தனுக்கு
உலகவர்முன் தாளம் ஈந்து—
அவன் பாடலுக்கு இரங்கும் தன்மையாளனை"

என வரும் தேவாரப் பாடல் குறிக்கின்றது. இறைவன்பால் ஆழ்ந்த அன்பு செலுத்தி ஆழ்வார் எனப் பெயர்பெற்றவருள் ஒருவராய திருமிழிசை யாழ்வாரின் மாணவர் கணிகண்ணன் ஒருகாலத்தரச ஞணையினுல் கச்சிமாநகரை விட்டகல நேரிட்டபொழுது அவரது தமிழிசையை இழக்க விரும்பாத பெருமாளும் உடன் சென்றனர் எனவும், அவர் போதலினின்றுந் தவிர்ந்தமையால் இறைவன்ருனும் போக்கொழிந்து படுத்துக்கொண்டாரெனவும் குறிப்பிடும் பாட்டினை எண்ணின் இறைமைக் குணங்களுளவாயினுர்க்கே இசை எத்துணை விருப்புடையதென்பது இனிது விளங்குமன்ருே? அப் பாடல் வருமாறு :

கணிகண்ணன் போகின்ருன் காமருபூங் கச்சி,
மணிவண்ணு நீகிடக்க வேண்டா—துணிவுடைய
செந்நாப் புலவனுஞ் செல்கின்றே னீயுமுன்றன்
பைந்நாகப் பாய்சுருட்டிக் கொள்.

இப்பாட்டின் நிகழ்ச்சியை உறுதிசெய்வார்போன்று மேலுமொரு பெரியார் "பைந்தமிழ்ப் பின்சென்ற பச்சைப்பசுங் கொண்டலே" எனக் கூறிக் கண்ணனைப் பராவுவா ராயினர். இவையெல்லாம் இறைவன்றன் னடியார்மாட் டிரங்கி நிகழ்த்திய இசைச் செயல்க ளாயினும் அடியாரன்றி மறவர்களும் இசைபாட அவ்விசைகேட்டு, இரங்கி எளிவந்து இறை இனிய செய்தான் என இலக்கியங்கள் கூறு கின்றன. இராவணன் இறைவன் அமர்ந்திருந்த கைலாய மலையைப் பெயர்த்தற்கு எண்ணி மலையினுள் நுழைந்து அகப்பட்டு வருந்தினுன். அங்ஙனம் வருந்தினவன் இறைவனை வேண்டி இன்னரம்போசையால் இசை கூட்டி இறைவனை மகிழ்வித்து வருத்தமகல வரம்பல பெற் ருன் எனப் புராணங்களில் கதைகள் வழங்கி வருகின்றன. இதனு லன்ருே இசைகூட்டி "அழுதால் உன்னைப் பெறலாமே" என அடியார்களுங் கூறிச் சென்ருர்கள். இசை மயமாகவும், இசைக்கு இரங்குபவராகவும் இறைவன் இருந்தமையாலன்ருே அடியார்கள் இசைபாடி இறைவனைத் தன்வயமாக்கிக்கொண்டு இச் செயல் செய்யாவிடின் நின்னை ஏசுவேன் என உரிமை பாராட்டியுங் கூறி ஞர்கள்.

"வாசி தீரவே
காசு நல்குவீர்

மாசின் மிழலையீர்
ஏச லில்லையே''

என வருகின்ற சம்பந்தர் திருமொழி இதனை உறுதிப்படுத்துதல் காண்க.

இசை வடிவாயுள்ள இறைவன் தம் வாழ்க்கையிலும் பற்றுக் கோடாயிருந்து ஆண் பெண் காதல் கொள்ள உதவினுன் என அறிஞர்கள் கருதினர்.

"சொற்பால் அமிழ்து இவள், யான்சுவை யென்னத் துணிந்து இங்ஙனே, நற்பால் வினைத்தெய்வம், தந்தின்று, நான் இவள் ஆம் பகுதி, பொற்பு ஆரறிவார்''—என வரும் திருக்கோவையார்ப் பாட்டிற்கு உரை எழுதிய பேராசிரியர்,

"அமிழ்தமும் அதன்கண் கரந்து நின்ற சுவையும் என்ன யான் இவள் என்னும் வேறுபாடு காணுது ஒழிய இருவரும் ஒருவேமாகிய ஏகாந்தத்தின்கண் பிறந்த பேர் இன்பவெள்ளம் யாவரான் அறியப் படும் என மகிழ்ந்து கூறினுன்'' என எழுதிச் செல்கின்ருர் ஆதலானும், "நற்பால் வினைத்தெய்வம்'' என்றமையாலும் ஆண் பெண் கூட்டுறவு இறைவனுல் பிணைக்கப்பட்டதென அறிகின்றமையாலும் இறைவன் திருவுளக் குறிப்பின் வண்ணமே எல்லாம் நிகழ்கின்றன என அறிகின்ருேமன்ருே? இதனைப் "பண்மயத்த மொழிப்பரவை சங்கிலிக்கும், எனக்கும் பற்ருய பெருமானே மற்ருரை யுடையேன்'' எனச் சுந்தரர் கூறு மாற்ருல் உறுதிப் படுத்தலாம். இங்ஙனம் வாழ்வின் எப்பகுதியிலும் இசை மயமாய் உள்ள இறைவன் இயையு மாற்ருல் இயைந்து நிற்றலை உணர்த்த அறிஞர்கள் இசையைப் பல் கருவிகளான் எழுப்பி இறை வழிபாட்டோடு பிற நலச் செயல்கட்கும் அவ்விசையைப் பயன் படுத்தினர். ஆனுய நாயனுர், புராணத்தில் இசைக்கு விலங்குகள் வயப்பட்டமையும் திருமிழிசை ஆழ்வார் இசை வன்மையாற் பெயர் பெற்றமையும் தமிழரின் இசை வன்மையை நன்கு வலியுறுத்து வனவாம். குடுமியாமலைக் கல்வெட்டுத் தமிழிசைக் கருவியை நினைவூட்டுவதன்ருே? சங்கநூற் பாட்டுக்களுள் ஒன்ருய மலைபடுகடாத்தில் முதற்கண் இசைக்கருவிகள் பல கூறப்படுகின்றன. "திருமழை தலைஇய'' எனத் தொடங்கி வருகின்ற அப்பாட்டின் முதற்கண் பல அடிகளில் பல்வகையாய இசைக் கருவிகள் கூறப்படுகின்றன. அவற்றின் வேறுபாடுகளை அறிஞர் ஆய்ந்து அறிவிப்பாராக!

சிலப்பதிகாரத்து அரங்கேற்று காதையில்,

"குழல்வழி நின்றது யாழே யாழ்வழித்
தண்ணுமை நின்றது தகவே, தண்ணுமைப்

பின்வழி நின்றது முழவே, முழவொடு
கூடிநின் றிசைத்த தாமந் திரிகை" என வருவன

கொண்டும் அக்காலத்திலேயே இசைக்கருவிகள் பல இருந்தமையை யாம் நன்கு அறியலாம். இங்ஙனம் பற்பல இசைக் கருவிகளால் எழுப்பப் பெறும் இசை, மிடற்றொலியோடியைந்து, பொருள் அறிவிக்கும் இசையாய் இருக்க வேண்டுமேயன்றிப் பொருளறிவாரா இசையாக இருந்தால் அவ்விசையால் பொதுமக்கள் அடையும் நன்மை என்ன? இசை பொருளறிவுறுத்தும் இசையாகவும் பொருளறிவுறுத்தா இசையாகவும் இருத்தலை யுணர்ந்து இசை யறிஞர்கள் இந்நுட்ப இயலினை நன்கு ஆராய்ந்து வேறுபாடு காட்டு முறையில் "ஓசை ஒலியெலாம் ஆனாய் நீயே" எனக் குறிப்பிட்டுள்ளனர். ஓசை பொருளறிவு தாராதெனவும் ஒலி பொருளறிவு தருமெனவும் யாமறிதற்கே ஓசை ஒலியெனப் பகுத்துக் கூறினர். இஃதுணராதார் இசைக்கு மொழி எற்றிற்கென வாதிடுகின்றனர். பொருளறிவில்லா இசைக்கும், ஊமையன் பித்தன் உளறி இழுத்து வாய்திறந்து கத்துதலுக்கும் வேறுபாடு என்னை?

இசை என்றால் பொருளாலும், இனிய ஒலியாலும் மக்களை இசைவிக்கும் பெற்றியில் இயங்குதலா யிருத்தலன்றோ இசை. அவ்வுணர்ச்சி இல்லா இசை இசையாமோ? தாய் மொழி வழியாக இசை வழங்கினாற்றான் தாய்நாட்டு மக்கள் இசையைத் துய்க்க முடியும். ஒவ்வொரு நாட்டிற்குந் தனித்தனி இசை யிருத்தல்போல நம் நாட்டிற்குத் தனியிசை வேண்டாமோ? ஒரு நாட்டின் வாழ்வும் தாழ்வும் அந்நாட்டின் இசையிலிருக்கின்ற தென்பதனை யாம் உளத்துட்கொண்டு பணிபுரிவோமாக! நம் தமிழிசையைத் தமிழ் வழியே வளர்த்தற்கு இராசா. சர். அண்ணாமலைச் செட்டியார் அவர்கள் பெருமுயற்சியினை மேற்கொண்டு சென்னைத் தமிழிசைச் சங்கத்தைத் தோற்றுவித்து அச்சங்கத்தின் அங்கமாய் மண்டில முழுமையும் பல கிளைச் சங்கங்களைத் தோற்றுவித்து, அச்சங்கங்களின் சார்பில் ஆங்காங்குத் தமிழிசைக் கல்லூரிகளையும் நாட்டித் தமிழிசையை வளர்த்து வருகின்றார்கள். இப்பெரியார்க்குத் தமிழ்நாடு நன்றி பாராட்டுங் கடப்பாடுடையது. இங்ஙனம் இசைத்தமிழ் வளர்ச்சியில் நாட்டங்கொண்டு பணியாற்றி வரும் இராசா. சர். அவர்களின் தொண்டிற்கு உறுதுணையாக இத்தகு மாநாடுகள் துணைபுரிகின்றன. இசைத்தமிழ் முழக்கம் எண்டிசையும் இயம்பும் வண்ணம் இவ்விசைச் சங்கம் போன்ற சங்கங்கள் ஏற்பனசெய்ய வேண்டுமென வேண்டுகின்றேன். வாழ்க தமிழிசை! வாழியர் தமிழர்!!

கொல்லிமலைச் செலவு.

ச. கணபதி, ஆசிரியர், பெருநிலக் கிழவர் உயர்நிலைத்
துவக்கப்பள்ளி, துறையூர்.

செலவின் காரணம் :—

ஏறத்தாழ ஏழாண்டுகட்கு முன் கரந்தைப் புலவர் கல்லூரியில் யான் தமிழ்க் கல்வி பயின்று வந்தேன். ஒரு நாள் மாலை வேளையில் கல்லூரித் தலைமை ஆசிரியர் அறையில் தலைமை ஆசிரியர் திரு. சிவ. குப்புசாமி அவர்களும் நானும் உரையாடிக் கொண்டிருந்தோம். உரையாடலின் இடையில் கொல்லி மலையைப் பற்றிய பேச்சு வந்தது. தலைமை ஆசிரியர் என்னை நோக்கி 'உன் ஊருக்கு அண்மையில் உள்ள சங்க இலக்கியத்தில் புகழ்ந்து கூறப்பெறும் இம் மலைக்குச் சென்று காணவில்லை யெனில் அஃது எனக்கு வியப்பைத் தருகின்றது' என்று கூறினர். அக் கூற்றே என்னை இம் மலைக்கு ஈர்த்துச் சென்றது.

நோக்கம் :—

எனக்குப் பன்னெடு நாட்களாய் இயற்கை வளங்களனைத்தும் ஒரு சேரத் தொகுக்கப் பெற்றிருக்கும் மலைக்குச் சென்று, அவ்வியற்கைக் காட்சிகளைக் காண வேண்டுமென்ற அவா இருந்தது. இந் நோக்கத்தை நிறைவு படுத்துதற்கே நான் இம்மலைச் செலவைத் துவக்கினேன்.

மலையின் பெயர்க் காரணம் :—

பழந்தமிழ்ச் சங்க இலக்கிய நூல்களுள் 'கொல்லிப் பாவை' என்னும் ஒரு குருடைத் தெய்வம் இம்மலையைக் காத்து வந்தது என்றும், எவரேனும் பகைவர் இம்மலையில் நுழைந்து தீங்கு செய்யின் அவர்களை இப்பாவை அச்சுறுத்திக் கொன்று அழிக்கும் என்றும் பரக்கக் கூறப் பெற்றுள்ளன. மேற்கூறிய காரணம் குறித்து இம் மலைக்கு இப்பெயர் ஏற்பட்டது.

சங்க இலக்கியச் சான்றுகள் :—

முற்கூறிய கருத்தை,

"ஓவத் தன்ன விடனுடை வரைப்பிற்
பாவை யன்ன நப்புறங் காக்கும்" (நற் 182 : 2 : 3)

என 'நற்றிணையும்,'

"பெரும்பூட் பொறையன் பேளமுதிர் கொல்லிக்
கருங்கட் டெய்வங் குடவரை யெழுதிய
நல்லிற் பாவை யன்ன"............... (குறுந். 89)

என 'நல்ல குறுந்தொகையும்,'

"ஓவத் தன்ன வுருகெழு நெடுநகர்ப்
பாவை யன்ன மகளிர் நாப்பண்" (பதிற். 88)

என 'ஒத்த பதிற்றுப் பத்தும்,'

"வல்லவன் றைஇய பாவைகொல்.........செல்வ மகள்
(கலித் 56.7-12)

எனக் 'கற்றறிந்தா ரேத்துங் கலித்தொகையும்,'

"கொல்லிப் பாவை அன்ன வெய்யோள்"
'பொறையன் கொல்லி............... (அகம் 62)

கடவுள்........எழுதிய பாவையின்...........

"ஓவத் தன்ன வினைபுனை நல்லிற்
பாவை அன்ன பலராய் மாண்கவின்" (அகநா. 98 : 11-2)

என அகநானூறும்,

'ஓவத் தன்ன விடனுடை வரைப்பிற்
பாவை யன்ன குறுந்தொடி மகளிர்' (புறநா. 251 : 1-2)

எனப் புறநானூறுங் கூறுமாற்றுல் இச்செய்தி வலியுறும்.

கொல்லியை ஆண்ட அரசர் :—

இம்மலையை ஆண்ட அரசர் பெரும்பாலும் சேரரே. இதற்குச் சான்றுகள் பல உள. சேரவரசர் பெருமைகளையே விதந்து கூறும் நூலாகிய பதிற்றுப்பத்திலும், அகநானூறு, புறநானூறுகளிலும் பரக்கக் காணலாம்.

"கழைவிரிந் தெழுதரு மழைதவழ் நெடுங்கோட்டுக்
கொல்லிப் பொருந! கொடித்தேர்ப் பொறைய...(பதிற் 73)

"கொல்லிக் கூற்றத்து நீர்கூர் மீமிசை
(பதிற்றுப்பத்து எட்டாம்பத்தின் பதிகம்)

என அரிசில் கிழார் பெருஞ்சேரல் இரும்பொறைச் சேரலையும்,

"சுரும்பார் சோலை பெரும்பெயர் கொல்லிப்
பெருவாய் மலரொடு பசும்பிடி மகிழ்ந்து (பதிற் 81)

எனப் பெருங் குன்றூர்க் கிழார் இளஞ் சேர விரும்பொறையையும் புகழ்ந்து கூறியுள்ளனர்.

"பொறையன் கொல்லி" (அகம் 62)

"வெல்போர்க் கானவன் கொல்லிக் குடவரை" (அகம் 130)

"ஓங்கு கொல்லி யோரடு பொருந" (புறம் 22)

என அகமும் புறமும் அறிவுறுத்துகின்றன. "சிலப்பதிகாரம்" எனும் சிரிய நன்னூலும்,

"வாழிய வில்லெழுதிய விமய நெற்றியொடு
கொல்லி ஆண்ட குடவர் கோவே"

என எடுத்தியம்பும். அன்றியும் "கொல்லிச் சிலம்பன்" "கொல்லி யம் பொருப்பன்" என வழங்கு மாற்றானும், அறியலாம்.

இவற்றிற்கு மாறாக "வல்வில் ஓரிக் கொல்லிக் குடவரை" (குறுந் 100) எனக் குறுந்தொகையும்,

"முள்ளூர் மன்னன் கழல்தொடிக் காரி
செல்லா நல்லிசை நிறுத்த வல்வில்
ஓரிக் கொன்று சேரலர்க் கீத்த
செவ்வேர்ப் பலவின் பயங்கெழு கொல்லி" (அகநா 209)

என அகநானூறும்,

"ஓரிகொல்லோ வல்லன் கொல்லோ" (புறநா 152)
"கொல்லி யாண்ட வல்வி லோரியும்" (புறநா 158-5)

எனப் புறநானூறும்

ஓரி என்னும் ஒப்பற்ற வள்ளல் இம் மலையில் வலியுடையனாய் இடையில் தோன்றிச் சேரர்க்கு அடங்கா நின்றான் என்றும், 'கொல்லி மலைநாடாண்ட கொற்றவா" என ஒரு சோழனைக்கம்பர் பிற்காலத்தே விளித்துக் கொல்லி மலையைச் சோழவரசனும் ஆண்டான் என்று கூறியனவும் கூறப்படுகின்றதே எனின், மாறாகாது. எவ்வாறெனிற் காட்டுதும்.

ஆய் என்னும் ஒரு வள்ளல் பொதிய மலையில் இடைக்கண் தோன்றிச் சிறிது காலம் விளங்கினாலும், அப்பொதிய மலையை என்ஞான்று முடைய பாண்டியர்க்கு அதனுரிமை தப்பாதவாறு போலவும் "நீர்திகழ் சிலம்பின் நேரியோனே" எனச் சேரனை ஓரமையம் நேரி மலைக்குரியோனெனப் பதிற்றுப்பத்து பகரினும், அந்நேரி மலையை எக்காலத்து முடைய சோழர்க்கு அம்மலையின் கிழமை தவறாதவாறு போலவும் இக் கொங்கு நாட்டு என்று முள கொல்லிமலை சேரர்க்கே சிறந்த தலைமையான மலை யென்பது வெள்ளிடை விலங்கலெனத் தெள்ளிதின் விளங்கும்.

இன்று ஆட்சி செய்வோர் :—

இன்று அக் கொல்லிமலை இந்திய நாடாளும் பிரித்தானியர் ஆட்சியின் கீழ் இருந்து வருகிறது. மலைக்காடுகளை மேற் பார்ப்பதற்கு அரசாங்கத்தாரால் மலைக்காட்டுத் துறை (Mountain forest officers) அலுவலாளர்கள் அமர்த்தப்பெற்று அவர்கள் மூலம் பல மலைகளும் கண்காணிக்கப்பெற்று வருகின்றன. அவ்வகையில் இக் கொல்லி மலையையும் மேற்கூறிய அலுவலாளர்கள் மேற்பார்வை செய்து காத்து வருகின்றனர். இது வரையும் கொல்லி வரையைப் பற்றிப் பொதுவாகக் கூறப்பெற்றன. நம் மலைச் செலவினையும் நாம் அங்குக் கண்ட சிறப்பியல்புகளையும் இனிக் கூறுவாம்.

கொல்லி மலைக்குரிய வேறு பெயர்களும், அவற்றின் காரணங்களும், சான்றுகளும் :—

இம் மலை குடதிசை (மேற்கு) உளதால் 'குடவரை' எனவும், நாற்புறமும் ஏறத்தாழ பன்னிரண்டு கல்லுக்கு பன்னிரண்டு கல் சதுரமாய்ப் பரவியுளதால் 'சதுரகிரி' எனவும், அரப்பளீசரைத் தன்னகத்துடைமையால் 'அரப்பளீசர் மலை' எனவும் வேறு பெயர்களாலும் அழைக்கப்படுகிறது. 'குடவரை' என்ற பெயர்க்குச் சான்றுகள் பழந்தமிழ் நூல்களுள்ளும், வேறு இரு பெயர்கட்கும் பிற்கால சதகத்துள்ளும் அமைந்துள்ளன. "குட கொல்லி" என இறையனார்களவியலுரை மேற்கோள் கூறும். அகநானூறு, புறநானூறு முதலியவற்றினின்று முன்னமேயே காட்டியுளேம்; ஆண்டுக் காண்க. ஆனால் பழந்தமிழ்ச் சங்க நூல்களுள் ஒன்றிலாவது 'சதுரகிரி' என்றோ, 'அரப்பளீசர் மலை' என்றோ பெயர் காண்டற் கில்லை. அதன் காரணம் ஆரியர் நுழைவிற்கு முன் தூய தனித் தமிழ்ச் சொற்களால் வழங்கி வரப்பெற்ற திருமறைக்காடு, திருவையாறு, பழமலை, திருக்குடந்தை, திரு மயிலாடுதுறை, புள்ளிருக்கு வேளூர், செங்காட்டுப்பட்டி, சித்திரைப்பட்டி, திருவரங்கம், வெண்குன்று, முதலிய ஊர்கள், இன்று முறையே வேதாரண்யம், பஞ்சநதம், விருத்தாசலம், கும்பகோணம், மாயூரம், வைத்திசுவரன் கோயில், சுவாமிமலை, வரதராசபுரம், மதுராபுரி, (சீ)ஸ்ரீரங்கம் என வடமொழிப் பெயர்களால் அழைக்கப்பட்டு வருகின்றன. இதே நிலையில் தான் குடவரை, கொல்லிமலை என்ற தனித் தமிழ்ச் சொற்கள் நின்றிருக்கிற இடத்தில் சதுரகிரி, அரப்பளீசர் மலை எனும் வடமொழிச் சொற்களும் வந்து நிற்கின்றன. அப்படி நிற்கின்றதால் 'குடவரை' எனும் தமிழ்ச்சொல் இன்று ஏட்டில் தவிர நாட்டில், வழக்காற்றில் காணேம். கொல்லி எனும் பெயர் மட்டும் இன்றும் ஏட்டிலும் நாட்டிலும் வழங்கி வருகின்றது. அதுவும் இன்னும் சிறிது காலத்தில் வழக்காற்றில் இராது மறைந்தொழிந்தாலும் ஒழியலாம். அதற்குத் தமிழர்களாகிய நாம் இடந்தரலாகாது.

சதுரகிரி, அரப்பளீசர் மலைப் பெயர்கட்குச் சான்றுகள் :— மிக மிகப் பிற்காலத்தில் வந்த நூலாகிய அரப்பளீசுரச் சதகத்தின் கண்ணுள்ள ஒவ்வொரு பாடலின் ஈற்றடி தோறும் "மதவேள் அனுதினமும் மனிதில் நினை தருசதுர கிரிவளர் அரப்பளீசுர தேவனே" என்று கூறப் பெற்றிருப்பதால் இவ் வீற்றடிகளே அப் பெயர்கட்குச் சான்றாக வமையும்.

(தொடரும்)

அறுதொழில்.

புலவர். ந. சுப்பராய பிள்ளை அவர்கள்,

தெற்குவிருதாங்கநல்லூர்.

"திருந்திய பண்புஞ் சீர்த்த நாகரிகமும்
பொருந்திய தாய்மொழி புகல் செம்மொழியாம்"

என்பது ஒத்து. தென்னாட்டின் கண் தனித்து, இவ்வோத்திற் கிலக்கியமாய் வழங்கும் மொழி தமிழ் மொழி யாதலின், அது 'உயர் தனிச் செம்மொழி' என வழங்கி வருகிறது. இதனிடையே பல வேறு மொழிகள் தோன்றின வென்பதே ஆராய்ச்சியாளர் முடிபாகும். பிறிதொரு மொழியினின்றும் இது தோன்றியதன்று.

இக்காலத்திலே சிறந்த தமிழ் நூற்களென யாவரானும் ஒப்ப உலவுவன சங்க நூற்களே. தமிழ், சங்கமிருந்து ஆராய்ந்து போற்றப் பட்டதென்பது தலை, இடை, கடைச்சங்கங்களென்ற பெயரானே நன்கு தெளியலாம். கடைச்சங்க காலத்தெழுந்த நூற்களுள்ளும் ஒரு சிலவே இஞ்ஞான்று நாமம் காணக் கூடியவாய் உலவுகின்றன. அக் கடைச்சங்க காலத்திற்கு முன்னரே வட ஆரியர்கள் தமிழ் நிலத்தே தமிழ் மொழியிடைத் தமது ஆரிய மொழியைப் பரப்ப லாயினர். கடைச்சங்க காலத்தே அருகிப் பயின்று பின்னர் ஆரிய மொழி தமிழ் நிலத்தே தலைமை பெறலாயிற்று. கடைச் சங்க நூற்களுள் ஆரியச் சொற்கள் மிக அருகித் தோன்றுவதோடு, அவைகளுள் தமிழ் மக்களுடைய பழக்க வழக்கங்களும் தெய்வக் கொள்கைகளும் குறியீடுகளும் பெறப்படுதற்கும், அதன் பின்ன ரெழுந்த நூற்களுள் அவைகள் பெறப்படுதற்கும் எவ்வளவு வேறு பாடுகள் உள்ளன? வடமொழி தமிழ் மொழியுடன் நாளடைவில் கலந்து, வளர்ந்து இடம் கொடுத்த தமிழ் மக்களது பழக்க வழக்கங் களைத் துடைத்து, தமிழ் மொழியின் நிலையைக் கலக்கியது. தமிழ் மக்கள் 'அறிவேன், அரிவேன்' என்ற இரு சொற்களின் வேறுபா டறியாத நிலையில் இஞ்ஞான்றும் வாழ்கின்றன ரென்றால் அவர் களால் தமிழ் மொழி எவ்வாறு போற்றப்பட்டிருக்கும் என்பதைச் சிந்திக்க வேண்டும். ஆரியர்கள் தமிழ் நிலத்தே பரவி தம்முடைய மொழி நூற்களில் பல கதைகளைப் புனைந்து தமிழ் மக்களுக்கும் போதித்துத் தம் வயமாக்கித் தம்மயமாக்கினர். அந்தோ! 'ஈன்றோ ளிருக்க மணைநீ ராட்டும்' இயல்பினை நம்மிடையே புகுத்தி நாம் மேற்கொண்டொழுகுமாறு செய்த செயலை என்னென்றியம்புவது.

பழந் தமிழர்களுடைய காலத்திலே தெய்வத்தை எவ்வாறு பேணி னர்? சமயச் சண்டை யுண்டா? எவ்வாறு கருமங்களைக் கையாண் டனர்? எவ்வாறு பெயரிட்டு வழங்கிக் கொண்டார்கள்? இவைகளைச் சற்றே ஆராய வேண்டும்.

தமிழ் மொழியில் மிகத் தொன்மை வாய்ந்த இணையில்லாச் சீரிய நூல் தொல்காப்பியம் என்னும் ஒத்து நூலாம். அந்நூலியற்றிய ஆசிரியர் தமது காலத்தே வடமொழி கலந்து வரும் நிலையைக் கண்டு அதனை ஒதுக்க முடியாமையால் தழுவித் தமிழில் இன்னவண்ணமாக

வழங்கப்படுமென ஒத்து வகுத்தனர். தமிழ் மொழியில் பின்னர்த் தோன்றிய 'நன்னூல்' என்னும் ஒத்து நூலில் வடமொழிக்கு ஒத்துக் கூறுதற்கும், அவர் உரைத்திருப்பதற்கும் உள்ள தன்மையை நோக்க, தொல்காப்பியனார் காலத்துக்குப் பின்னர் எவ்வளவு அளவில் வடமொழி தமிழிற் பயின்று வந்த தென்பதைக் காணலாம். இப்பொழுது நாம் தெய்வத்துக்கு இட்டு வழங்கும் பெயர்களெல்லாம் வடமொழிச் சொற்களே. தமிழ் மக்கள் பண்டைக் காலத்தே தெய்வத்தை எவ்வாறு கொண்டனர். மனமொழி மெய்களுக்கெட்டாது காலங்கடந்து நிற்கும் பொருளுக்கு காலத்தொடுங் கதையொடுங் கூடிய நாமங்கள் எவ்வாறுண்டாயின? "ஒருநாம மில்லார்க்கு ஆயிரமாந் திருநாமம்" செப்பியுலவுந் தமிழ் நாட்டிலே பண்டைக் காலத்திய பெயர்கள் இறைவன், தலைவன், செம்பொருள் என இன்னோரன்ன காலமுங் கதையுந் தழுவாத சொற்களே நிலவி வந்த வென்பதை நோக்குமிடத்து அவர்களிடைச் சமயச்சண்டை யெவ்வாறு தோன்றியிருக்கும்? நன்மை தீமைகளை யியற்றியவனே அவ்வவற்றின் பயன்களை அனுபவிப்பதன்றி, ஒருவனியற்றியவற்றின் பலனை மற்றொருவன் அனுபவிக்கிறானென்ற உணர்ச்சி தமிழ் மக்கள்பாலில்லை. "புத்தேள் உலகம் புதல்வருந் தாரார்" "மிக்க அறமே விழுத்துணையாவது" என்பன போன்றவைகளே தமிழரது உறுதி. தென்புல வாழ்நர்க் கருங்கடனிறுக்கும் பொன்போற் புதல்வர்" என்பதே அவர்களுடைய கொள்கை. இயற்கையாக நிலம் நான்கு பாகுபாடுடைமையால் நானிலம் என வழங்கப்பட்டு, அந் நிலத்திற்கேற்ற ஒழுக்கத்தினை வளப்படுத்திக் குறியீடுகளும் அமைத்துக்கொண்டு தமிழ் மக்கள் வாழ்ந்தமை கடைச் சங்க நூற்களாற் பெறப்படும். ஊர், குலம், நிலை, தொழில் முதலியன பற்றிப் பெயரமைத்துக் கொண்டு நிலத்தின் இயற்கைகளை நன்கு கூர்ந்தறிந்து தம்முடைய வாழ்க்கையைச் சீர் படுத்தி வாழ்ந்தனர் பண்டைத் தமிழ் மக்கள்.

தமிழ் நிலத்து மக்கள் ஆரியர் புனைந்துரைப்பனவற்றை உண்மையாகத் தழுவித் தமது பண்டை நிலையினின்றும் பிறழலாயினர். தமிழ் மொழி தனிமொழி யென்பது ஒழிய வேண்டும் என்ற நோக்கமே கையாண்டனர் ஆரியர் என்றல் வழுவாகாது. எந்நூலை யெடுப்பினும் ஆரியத்தினது மொழிபெயர்ப்பே யெனக் கூசாது கூறுவராயினர். இஞ்ஞான்றும் அம் மயக்க வுணர்ச்சி சிலரிடை மாறுதலடைய வில்லையெனின் தமிழ் மொழி சீர் குலைந்த மத்திய காலத்தே எந்நிலைமை யிருந்திருக்கும் என்பதைக் கருத வேண்டும். (இவ் இடைக் காலத்தே அஃதாவது கடைச்சங்க காலத்திற்குப் பின்னரும் இந் நூற்றாண்டிற்கு முன்னரும்) எழுந்த புராணங்களும் தத்துவ நூல்களும் நீதி நூல்களும் ஆரியர்கள் கருத்தை வலியுறுத்தியே எழுந்தன. கடைச்சங்க காலத்தை யொட்டியதென வழங்கும் திருக்குறள் என்னுந் தமிழ் நூலும் வடமொழி நூற்களின் கருத்தே கொண்டு யாத்ததென்பது ஆரியர்கள் கொள்கை. அந் நூற்கு உரை வகுத்த பரிமேலழகரென்னும் பெரியார் வடமொழி நூற்களிற் கூறியுள்ள முறைபற்றியே உரையிட்டாரென்பது கற்பார் உணர்வர். இடைக்

காலத்தே தமிழரது பழக்க வழக்கங்கள் ஆரியரது ஆணையை மேற் கொண்டனவாயின. மாதர்கள் கற்பு நிலை என்பதைப் பற்றிய பண்டைய கொள்கை யாது? "மண்டிணி ஞாலத்துமழை வளந்தரூஉம் — பெண்டிராயிற் பிறர் நெஞ்சு புகார்" எனத் தமிழ் நூல் சான்றுடன் கூறுவதை 'மணிமேகலை' என்னும் நூலுள் இன்றுங் காண்கிறோம். ஆரியரது கொள்கை யாது? குல குருவைக் கூடி மகப் பேறடையலாம் எனச் சான்றுடன் கூறுவது ஆரியரது ஒழுக்கம். அதனைத் தமிழ் மக்கள் ஒப்புக்கொண்டு வாழ்ந்தனர் என்பது ஒப்பக் கூடியதன்று. ஏனெனில், வடநாட்டு அரசர் பரம் பரையில் அதற்குச் சான்றுளதே யன்றித் தமிழரசர்களாகிய சேர சோழ பாண்டியர்களிடத்தில் அந் நிகழ்ச்சி யுண்மைக்குச் சான்றிலது. வடமொழியாளர் பழக்க வழக்கங்களைத் தமிழ் மக்கள் மேற் கோடலான் அவர் அவ்வாறு உரையிட்டது அக் காலத்தியல்பிற்குப் பொருத்தமானதே யன்றி வழுவுரை யென்று கோடல் இழுக்காம். இவ் இடைக்காலத்தே ஆரியர் பரவ விட்ட 'வேதம்' முதலிய கலை களிற் கூறியனவே மக்களிடை யொழுகலாயின. "வல்லான் வகுத் ததே வாய்க்கால்" என்னும் பழமொழி மெய்த்தது. தமிழ் ஒழுக் கங்களை வகுக்கும் நூற்களுக்கு ஆரிய ஒழுக்கங்களே உரையாகக் கருதப்பட்டன. 'வேதத்தை' 'மறை' யென்று வழங்கலாயினர். 'வேதம்' என்பது வடசொல். 'மறை' யென்பது தமிழ்ச்சொல். அச்சொல்லிலுள்ள 'ற' கரமே எடுத்துக் காட்டாம். வேதம் என்ப தற்கு அறிவிப்பது என்று பொருள். மறை யென்பதற்கு மறைந்த பொருளுடையது என்பது பொருள். வடமொழியுள் 'வேதம்' என்றும், தமிழ்மொழியுள் 'மறை' யென்றும் கூறப்படுவது ஒரே நூலாயின் வேதம் என்ற சொற் கேற்ற மொழி பெயர்ப்புச்சொல் வழங்க வேண்டாமா? வடமொழியாளர் வகுத்துள்ள வருணவேறு பாடுகளாகிய பிராமண க்ஷத்திரிய வைசிய சூத்திரரென்னுமவற்றின் மொழி பெயர்ப்பே தமிழிற் கூறப்படும் அந்தணர் அரச வணிக வேளாளரென்ற சொற்களா? என்பதை ஆராயவேண்டும். ஆரியர் சூத்திரர்க்கு ஏனை மூவர்க்கும் அடிமை செய்தலைத் தவிர வேறு தொழில் கூறவில்லை. தமிழ் ஒத்தாகிய தொல்காப்பியமோ வேளா ளர்க்கு ஆறுதொழில் வகுத்துக் கூறுகின்றது. ஆரியரது வேதம் ஒரு சாரார்க்குரித் தென்கின்றது. தமிழோ அங்ஙனன்றி யாவர்க்கும் உரித்தென்கின்றது. தமிழ் நீதிநூலாகிய திருக்குறள் யாவார்க்கும் ஒப்ப முடிந்ததாதலின் அது 'பொதுமறை' என வழங்கப்படுகின்றது. ஆரிய வேதத்துக்கு இப்பெயர் பொருந்தாது. வேதத்தைத் திருக் குறளாசிரியர் "அந்தணர்நூல்" எனக் குறிப்பிடுகிறார். ஆனால், அவர் நீத்தார் பெருமையிற் கூறும் 'அந்தணர்' என்ற பெயர்க்கும், "அந்தணர்நூல்" என்ற விடத்துக் கூறும் அந்தணர் என்ற பெயர்க் கும் பொருள் ஒன்றுமோ? எனச் சிந்திக்கவேண்டும். நீத்தார் பெரு மையில் அந்தணர் என்ற சொற்கு அருளுடையவர் என நூலாசிரி யரே உரை வகுத்துச் செய்யுளுட் கூறினர். செங்கோன்மையில் 'அந்தணர்' நூல் என்றவிடத்து, 'அந்தணர்க் குரியவேதம்' எனப்

பரிமேலழகர் உரை கூறியுள்ளார். ஒழுக்கமுடைமையில் "மறப்பினும்" எனத் தொடங்குங் குறளில் 'பார்ப்பான் பிறப்பு' என்பதற்குப் 'பார்ப்பானது உயர்ந்த வருணம்' என உரைவகுத்து 'ஒழுக்கங்கெட இழிபிறப்பாம்' எனவுங் கூறுகின்றார். எனவே ஆரியருள் உயர்பிறப்பும் இழிபிறப்பும் ஒழுக்கத்தினாலுண்டாவன என்பது போதரவில்லையா? ஆரிய முனிவர் பலருடைய வரலாறுகளும் இக்கருத்தினை வலியுறுத்துவனவேயன்றோ? மேலும் அக்குறளிற் கூறிய 'ஒத்து' என்னுஞ் சொற்கு 'வேதம்' என்னும் வடசொல்லைப் பொருளாகக் கூறுகின்றார். ஆணை நூலை 'ஒத்து' எனத் தமிழ் நூலார் வழங்கினர். திருக்குறளுக்கு உரைவகுத்த பரிமேலழகரது, காலம் ஆரியரது ஆணை வழியொழுகிய தமிழ்மக்களது காலமாதலின் அக்காலத்திற்கும் மக்களொழுக்கிற்கும் ஏற்ப உரை வகுத்தனர் என்றே கோடும்.

இனி, தமிழ் மக்களது இயல்பிற்கு இயல் வகுத்த ஆசிரியர் தொல்காப்பியனார் 'அறுவகைப்பட்ட பார்ப்பனப் பக்கமும்' என அந்தணர்க்கு அறுதொழிலுரிமை யாமெனத் தொகை கூறியதன்றி இன்னின்னவென வகை கூறினாரில்லை. அதற்கு உரை வகுத்த உரையாசிரியர்கள் தற்காலத்தே தமிழ் நிலத்து வழங்கிய 'ஓதல், வேட்டல் அவை பிறர்ச் செய்தல்—ஈதலேற்ற' லென்பனவற்றிற்கு ஆரிய வழக்கொடுபட்டே உரை கூறினர். நூலாசிரியர் காலத்திற்கும் உரையாசிரியர்கள் காலத்திற்கும் பல்லாண்டுகள் இடை நிகழ்வின் பேதங்கள் பல வேறுபட்டன வெனக் கருதுதல் வேண்டும். தமிழ் மறையாகிய திருக்குறள் அவற்றை எவ்வாறு கூறுகின்றது? ஓதல், ஓதுவித்தல், ஈதல் மூன்றும் தமிழராற் போற்றப்பட்டனவே. வேட்டல் என்பது ஆரியரது ஒழுக்கம். இது திருக்குறள் ஆசிரியர் காலத்தே உயர்ந்த ஒழுக்கமாக வழங்கப்பட்டிருப்பினும், 'அவிசொரிந் தாயிரம் வேட்டலி னொன்றன் உயிர் செகுத்துண்ணாமை நன்று' என மறுத்துள்ளார். மேலும் இதனை வலியுறுத்தி 'நல்லா றெனப்படுவ தியாதெனின் யாதொன்றுங் கொல்லாமை சூழும் நெறி' எனவும், 'நன்றாகு மாக்கம் பெரிதெனினுஞ் சான்றோர்க்குக் கொன்றாகும் ஆக்கங் கடை' எனவும் கூறியுள்ளார். 'ஆயிரம் (அசுவமேத யாகம்) பரிவேள்வி யியற்றியவன் தேவ அதிபதியாவன்' என்பது ஆரியர்களது கொள்கை. யயாதி, நகுடன் முதலான ஆரிய அரசர்கள் அவ்வாறெய்தியதற்குச் சான்று. பதவியை யெய்திய அவ்விருவரும் ஆண்டிருந்தின்ப மெய்தினரோ வெனின்? இல்லை. உடனே அழுக்காற்றினால் தள்ளப்பட்டார்கள். திருவள்ளுவனார் இன்னோரன்ன ஆக்கத்தை 'நன்றாகும் ஆக்கம்' எனக் குறிப்பிடுகின்றார். ஒருயிரைக் கொன்று இயற்றும் வேள்வியினால் உண்டாம் பயன், வினைவின்கண் மிக்க நன்மைதரக் கூடியதாயினும் கீழ்ப்பட்டதே' எனத் தெள்ளத்தெளிய தமிழ் மக்களது வாழ்க்கைத் திறனைப்போற்றி ஆணை வகுத்துள்ளார். அவ்வாறே, மக்களை நன்னெறிக்க ணுய்ப்பதற்காகவே ஏற்றுக் கொள்கின்றோமெனக் கூறும் அந்தணரது ஏற்றல் கொள்கையையும் 'நல்லாறெனினுங் கொளல் தீது' என மறுத்துள்ளார். வீட்டுலகத்திற்கே

நல்ல நெறியாயினும் ஏற்றல் தீது என ஏற்பாரை நோக்கிக் கூறு கின்றார். அதனை வலியுறுத்திப் 'பழிமலைந் தெய்திய வாக்கத்திற் சான்றோர் கழி நல்குரவே தலை' என அவற்றை மறுத்த மக்களைச் 'சான்றோர்' என்கின்றார். கொலை செய்து வேட்டலால் பழியும், அதனாற் பெறப்படும் இந்திரபத முதலாய ஆக்கமும் என அவராற் சுட்டப்பட்டன. எனவே, வேட்டல், வேட்டுவித்தல், ஏற்றல் என்னும் பார்ப்பாரது அறு தொழிலிற்பட்ட மூன்றும் தமிழ் மக்களொழுக்கிற் கேலாத வெனத் திருவள்ளுவனாரால் விலக்கப்பட்டனவாம். வேட்டலை மறுக்கவே வேட்பித்தலை மறுத்தலும் பெறப்படுமன்றோ? ஆயின் அவர் கூறுவன யாவை? அவர் வேள்வி யென்பதனை விருந்தோம்பல் எனக் கூறுகின்றார். 'விருந்தோம்பி வேள்வி தலைப்படாதார்" என வருவனவற்றாலும், 'வேள்விப் பயன்' என்ற வழி 'விருந்தோம்பலாகிய வேள்வி' என உரை கூறுமாற்றானும் பெறப்படும்.

இனி, இரவலர் புரவலரை ஈயுமாறு வற்புறுத்துஞ் செய்தி புறநானூறு முதலிய தமிழ் நூல்களில் காணலாம். "அறுவகைப் பட்ட பார்ப்பனப் பக்கமும்" என்ற விடத்து, ஏற்றலாவது 'கொள்வோன் தனது சிறப்பிற் குன்றுமற் கோடல்' என உரை கூறி, 'இரவலர் புரவலை நீயுமல்லை' என்ற புறநானூற்றுச் செய்யுளை (162) உதாரணங் காட்டுகின்றார் உரையாசிரியர். இதனால் பரிசிலரது தரமறிந்து கொடுக்க வேண்டுமென வெளிமான் தம்பிக்குப் பெருஞ் சித்திரனார் அறிவுறுத்தின ரென்பது பெறப்படுதலின், ஈவித்தலின் கண் படாதோ? எனவே வேட்டல், வேட்பித்தல், என்பவற்றிற்கு விருந்தோம்பலும், விருந்தோம்புவித்தலு மெனவும், ஏற்றல் தொழிலை மறுத்து ஈவித்தல் தொழிலைக் கொண்டும், 'ஓதல்' ஓதுவித்தல், விருந் தோம்பல், விருந் தோம்புவித்தல், ஈதல், ஈவித்தல்' என அறு தொழில் கொள்ளின் வரும் இழுக்கென்னையோ? இவ்வாறு திருவள்ளுவனார் யாவர்க்கும் ஒப்பப் பொதுவாக விதி நூல் இயற்றினமை 'பொது மறை' யென்ற அதன் பெயரானே போதரும். மேலும் ஒரு சாரார்க்குச் சிறப்பாகிய வேதத்தை (ஆரிய ஒழுக்கத்தை) மறுத்துரைத்தலின் பொது நின்று ஆரிய ஒழுக்கத்தை மறுப்பது 'பொது மறை' யென்றே கொள்ளலாம். கறை, நிறை என்பன போல மறை என்னுஞ் சொல்லும் 'மறுத்தல்' என்னும் ஐகார வீற்றுத் தொழிற் பெயரன்றோ? ஆரியர்கள் தங்கள் மொழியைத் தமிழ் மன்னர்களது துணைகொண்டு மக்களிடைப் பரப்பினரென, 'அந்தணர் நூற்கும் அறத்திற்கும் ஆதியாய் நின்றது மன்னவன் கோல்' என்ற குறள் கூறுகின்றது.

ஆரியரது ஒழுக்கங்களும், தமிழரது ஒழுக்கங்களும் வெவ்வேறாகவே யிருந்திருக்க வேண்டுமெனவும், தமிழரது ஒழுக்கமே சீரிய தெனவும் மக்கள் உணர்ந்து விழித் தெழுமிக் காலத்தே ஆராய்ச்சியாளர்கள் கிடைத்துள்ள பழந் தமிழ் நூல்களின் தொடர்பினால் தமிழ் மக்களது பழக்க வழக்கங்களை நுனித்துணர்ந்து சிறந்த முறையினைத் தமிழ் நிலத்தே பரவ விடவேண்டும்.

"எப்பொருள் யார் யார்வாய்க் கேட்பினு மப்பொருள்
மெய்ப்பொருள் காண்ப தறிவு"

முத்தமிழ் வள்ளல், இராவு பகதூர்

திரு. A. Y. அருளாநந்தசாமி நாடார் அவர்கள்



மீண்டும் சங்கத்தலைவ ரானார்.